உலக அமைதியை நிலைநாட்டுவதற்கு அஹ்மதிய்யா கிலாஃபத்தின் உலகளாவிய முயற்சிகள் பக்கம் 3

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் படைப்பினங்கள் மீதிருந்த அனுதாபம் பக்கம் 11

ஒரு கிறித்தவரின் மூன்று வினாக்களும் அவற்றிற்கான விடைகளும் (தொடர்–6) பக்கம் 15

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஐரோப்பிய சுற்றுப் பயணம் பக்கம் 21



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

**Nubuwwat Vazhi | December 2024 | Vol. 4 - Issue No. 1**



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311






# திருக்குர்ஆன்

وَلَا تَسْتَوِى الْحَسَنَةُ وَلَا السَّيِّئَةُ ۚ اِدْفَعْ
بِالَّتِىْ هِىَ اَحْسَنُ فَاِذَا الَّذِىْ بَيْنَكَ وَبَيْنَهٗ
عَدَاوَةٌ كَاَنَّهٗ وَلِىٌّ حَمِيْمٌ

நன்மையும் தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமையுள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகி விடுவார். (41:35)



# ஹதீஸ்

عَنِ النَّوَّاسِ بْنِ سَمْعَانَ الأَنْصَارِيِّ قَالَ :
سَأَلْتُ رَسُولَ اللَّهِ صلى الله عليه
وسلم عَنِ الْبِرِّ وَالإِثْمِ فَقَالَ "
الْبِرُّ حُسْنُ الْخُلُقِ وَالإِثْمُ مَا حَاكَ
فِي صَدْرِكَ وَكَرِهْتَ أَنْ يَطَّلِعَ
عَلَيْهِ النَّاسُ "

ஹஸ்ரத் நவ்வாஸ் பின் ஸம்ஆன் அல்அன்ஸாரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் நன்மை மற்றும் தீமை பற்றி கேட்டேன். அதற்கு அவர்கள், ''நன்மை நற்பண்பாகும். தீமை என்பது எந்த செயல் குறித்து உனது உள்ளத்தில் நெருடல் ஏற்படுவதுடன், அதை மக்கள் தெரிந்து கொள்வதை வெறுப்பாயோ அதுவாகும் என்று விடையளித்தார்கள்.'' (முஸ்லிம் அத்தியாயம் 45 ஹதீஸ் எண். 4612)

# உலக அமைதியை நிலைநாட்டுவதற்கு அஹ்மதிய்யா கிலா:ஃபத்தின் உலகளாவிய முயற்சிகள்

டாக்டர் சர் இஃப்திஹார் அஹ்மத் அயாஸ் ஸாஹிப்
(Chairman, International Human Rights Committee, UK.)

தமிழாக்கம்: மவ்லவி ஸாஹிர் ஹுஸைன் மற்றும் இப்னு வஸீம்

இன்று உலகில் ஒரு நம்பிக்கையின்மை மற்றும் அச்சத்தின் சூழல் உள்ளது. போர் மேகங்கள் வலம் வந்து கொண்டிருக்கின்றன. இப்பொழுது மனித குலத்திற்கு இதர உலகத் தேவைகளுடன் சேர்த்து அமைதி, சமாதானம் மற்றும் நிம்மதியின் தேவையும் எந்த அளவு இருக்கிறது என்றால், இதற்கு முன் ஒருபோதும் அந்த அளவு தேவை இருந்திருக்காது. மூன்றாம் உலகப் போருக்கான ஆபத்துகள் உருவாகி விட்டன. இந்த சூழ்நிலையில் பொது அமைதிக்கான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். உலகில் ஆயுதங்களையும் போரையும் பரப்புவதற்கான பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த சூழலில் உலகில் மனித குலத்தின் மீது அனுதாபம் காட்டக்கூடிய அதற்குத் தன்னலமின்றித் தொண்டாற்றக் கூடிய, அதற்காக துஆக்கள் செய்யக்கூடிய ஒரு தூய்மையான அமைப்பு அஹ்மதிய்யா கிலா:ஃபத் ஆகும்.

இன்று உலகில் பொது அமைதி ஏற்படுவதற்கு, அஹ்மதிய்யா கிலா:ஃபத் எந்த அளவு முயற்சி செய்திருக்கிறதோ அதற்கு நிகர் எதுவும் இல்லை. நம்முடைய அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ:ஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களே உலகத்திற்கு மூன்றாம் உலகப் போர் பற்றி நீண்ட காலமாகத் தொடர்ச்சியாக எச்சரித்து வருகிறார்கள். அன்னார் அமைதி, சமரசம் மற்றும் சமாதானத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளும் ஒரே உலக வழிகாட்டி ஆவார்கள். நாம் அன்னாரை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்கள் என்பது நமது நற்பாக்கியம் ஆகும். ஆனால், அன்னாரை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்காகவும் அன்னார் அவ்வாறே வேதனையுடன் துஆக்கள் செய்கிறார்கள். அதற்கான அடிப்படை காரணம், அமைதியை நிலைநாட்டுவது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அனைத்துக் கொள்கைகளிலும் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை ஆகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் உலக அமைதிக்கான எத்தகைய கம்பீரமிக்க கோட்பாடுகளை உலகின் முன் வைத்தார்கள் என்றால், உண்மையான அமைதி மற்றும் உண்மையான வளம் அதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் இது தொடர்பாக இந்த ஒரு பொன்னான கோட்பாட்டை உலகுக்கு முன் வைத்தார்கள்:

உலகில் வந்த அனைத்து நபிமார்களையும் நாம் உண்மையானவர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்தக் கோட்பாடு, மிகவும் அழகானதும் அமைதியை ஏற்படுத்துவதும் சமரசத்திற்கு வித்திடக்கூடியதும் மற்றும் நமது நல்லொழுக்க நிலைக்கு உதவிடக் கூடியதும் ஆகும். இந்தக் கோட்பாட்டையே திருக்குர்ஆன் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறது. இந்தக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே நாங்கள் எல்லா மதத்தலைவர்களையும் கண்ணியமானவர்களாகப் பார்க்கிறோம். (துஹ்:ஃபா கெய்ஸரிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 12 பக்கம் 259)

இன்றும் உலகம் இந்த கம்பீரமான கோட்பாட்டில் நிலைத்து நின்றால், உலகின் ஒரு பெரும் பகுதியில் அமைதி மற்றும் சமரசத்திற்கான பயிர்கள் விளையும். உலகில் குழப்பமும் தீமையும் முடிவுக்கு வந்து விடும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு உலக அமைதி குறித்து எந்த அளவுக்குக் கவலை இருந்தது என்றால், அன்னார் தமது வ:ஃபாத்திற்கு வெறும் இரண்டு நாள்களுக்கு முன் எழுதிய தமது நூலில், இந்தியாவின் இரு பெரும் சமுதாயங்களான முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும், 'மதவேறுபாடு இருந்தாலும் நாம் அனைவரும் மனிதர்கள் ஆவோம்' என்ற அமைதி மற்றும் சமாதானத்திற்கான போதனையை வழங்கினார்கள்.

அன்னார் கூறினார்கள்: எனவே, நமது கடமையாவது, தூய உள்ளத்துடனும் நல்லெண்ணத்துடனும் ஒருவர் மற்றவரின் தோழர் ஆகி விட வேண்டும். மேலும், மார்க்க மற்றும் உலக சிக்கல்களில் ஒருவர் மற்றவர் மீது அனுதாபம் காட்ட வேண்டும். ஒருவர் மற்றவருடைய உடல் உறுப்பாக ஆகி விடும் அளவிற்கு அனுதாபம் காட்ட வேண்டும். (பைகாமே சுல்ஹ் (தமிழில் - சமாதானத் தூது), ரூஹானி கஸாயின் தொகுதி 23 பக்கம் 439)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் பொது அமைதிக்காக மேற்கொண்ட முயற்சிகளை அன்னாரது வ:ஃபாத்திற்குப் பிறகு, அன்னாருடைய கலீ:ஃபாக்களும் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார்கள். இது ஐந்தாவது கிலா:ஃபத்திலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அஹ்மதிய்யா கிலா:ஃபத் மீது ஒரு பார்வையை செலுத்துவதன் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கலீ:ஃபாக்கள் இறைவனின் படைப்பினங்களுக்கு நீதி வழங்குகிறார்கள் என்பது நன்றாகத் தெரிந்து விடுகிறது. உரிமைகளை செலுத்துவதற்காக, அவர்கள் ஒருபுறம் ஓர் அரசருக்கோ

அல்லது அதிகாரித்தில் இருப்பவருக்கோ வழிகாட்டிய வண்ணம் இருக்கிறார்கள் என்றால், மறுபுறம் நாடுகளில் சட்டமன்ற அமைப்புகளிலும் பாராளுமன்றங்களிலும் சொற்பொழிவாற்றுவதன் மூலமாக உலக சமுதாயங்களை அநீதியிலிருந்து தடுப்பதற்கும் நேர்வழியின் பால் நடக்கச் செய்வதற்கும் கடும் முயற்சி மேற்கொள்கிறார்கள். சில நேரம் தம்முடைய குத்பாக்களில் முஸ்லிம்களுக்கு சீர்திருத்தம் மற்றும் வருங்காலத்துக்கான செயல்திட்டம் குறித்து தெரியப்படுத்துபவர்களாகக் காணப் பெறுகிறார்கள் என்றால், சில நேரம் தமது கடிதங்கள் மூலமாக அந்த அமைதியை வழிமறிக்கும் தடைகளை அகற்றுவதற்கான பெரும் முயற்சியில் ஈடுபட்டவாறு தென்படுகிறார்கள்.

இறைபடைப்பினங்களுக்கு நிம்மதி கிடைக்க வேண்டும். அவர்களின் துன்பங்களுக்கு மருந்தாக வேண்டும். அவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ள போர்கள் முடிவுக்கு வரவேண்டும். அவர்களுக்கு நிம்மதியான தருணங்கள் கிடைக்கப் பெற வேண்டும். அவர்களின் பேராபத்துகள், கஷ்டங்கள், அமைதியாகவும் நிம்மதி-யாகவும் மாறி விட வேண்டும். மேலும், அவர்களின் வாழ்வுகள் பிரச்சனைகள் எனும் குறுகிய பாதையில் இருந்து வெளியேறி செழிப்பான நெடுஞ்சாலை-களில் நடைபோட வேண்டும் என்பது மட்டுமே அஹ்மதிய்யா கலீஃபாக்களின் குறிக்கோளாக உள்ளது.



காலம் சாட்சியாக உள்ளது! நாம் அனைவரும் சாட்சியாளர்களாக உள்ளோம்! உலகில் அமைதியின் அரசர் ஒருவர் இருக்கிறார் என்றால், அவர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வழிகாட்டி, முஸ்லிம்களுக்காக வேதனை கொண்டிருக்கக்கூடிய, இறைவனின் இந்த கலீஃபாவே ஆவார். அல்லாஹும்ம அய்யதஹு பிரூஹில் குத்ஸ்! (அல்லாஹ்வே! தூய ஆன்மாவின் மூலம் அவர்களுக்கு உதவி புரிவாயாக)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு, ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கிலாஃபத் அரியணையில் வீற்றார்கள். ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் மிஷனைத் தொடர்ந்தார்கள். அன்னார் உலகின் முன்னேற்றம் மற்றும் வளத்திற்கான, மறைந்துள்ள இரகசியத்தை எடுத்துரைத்த வண்ணம் கூறுகிறார்கள்: நீங்கள் அமைதியை விரும்பும் ஜமாஅத்தாக ஆகிவிடுங்கள்! உலகின் பணி, அமைதியைச் சார்ந்துள்ளது. உலகில் அமைதி நிலைபெறவில்லை என்றால், எந்த வேலையும் நடக்க முடியாது. எந்த அளவு அமைதி இருக்குமோ அந்த அளவே இஸ்லாம் முன்னேற்றம் அடையும். அமைதி இல்லையென்றால், மார்க்க மற்றும் உலகப் பணி எதையும் நம்மால் நல்ல முறையில் செய்யவே முடியாது. இதனால், நான் வலியுறுத்திக் கூறுகிறேன்! அமைதியை அதிகரிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். நீங்கள் அமைதியை விரும்பும் ஜமாஅத்தாக ஆகுங்கள். இவ்வாறு நீங்கள் முன்னேற்றம் அடைவீர்கள்! உங்களால் நிம்மதியாக வாழ்வைக் கழிக்க முடியும். (ஹகாயிக்குல் ஃபுர்கான் தொகுதி 4 பக்கம் 453 - 454)


1914-இல் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்பொழுது ஒரு புதிய காலகட்டம் ஆரம்பம் ஆனது. அன்னாருடைய கிலாஃபத் காலகட்டத்தில் அன்னாரின் இரவு பகலான முயற்சிகள் மற்றும் போராட்டங்களின் விளைவாக இறைவன் பல மக்களுக்கு அமைதியையும் நிம்மதியையும் வழங்கினான். அன்னாருடைய பரிவு உலகின் மூலைமுடுக்குகள் வரை பரவி இருந்தது. போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் படைப்பினங்களுக்குத் தொண்டாற்றுவதிலிருந்து, அநீதி இழைப்பவர்களின் பிடியில் இருந்து அநீதிக்குள்ளானவர்களை விடுவிப்பது வரை, உலக சமுதாயங்களின் மத்தியில் ஒற்றுமை மற்றும் ஒருவர் மற்றவருக்கு கண்ணியம் அளிப்பதிலிருந்து அரசியல் ரீதியான மனவேற்றுமையில் இரு தரப்பினருக்கும் புரிய வைப்பது வரை, ஒவ்வொரு போர்க்களத்திலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் உயர்வான தொண்டுகள் ஆற்றினார்கள். உலக அமைதிக்கு ஈடு இணையற்ற பங்களிப்பை அளித்துள்ளார்கள்.

உலகில் பரவியுள்ள மன உளைச்சல் மற்றும் குழப்பத்துக்கான ஒரு மிகப் பெரும் காரணம், மத சகிப்பின்மை ஆகும். ஒருவர் மற்றவருடைய சான்றோர்-களை கண்ணியமான முறையில் நினைவு கூர்ந்தால், சமூகம் நிம்மதி அடையும் அளவிற்கான அமைதி சூழல் நிலைபெற்று விடும். இந்த அடித்தளத்தையே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் நிலைநாட்டினார்கள். சீரத்துன் நபி (ஸல்) கூட்டங்களை ஆரம்பித்தார்கள். இதே கூட்டங்களின் ஒரு பரக்கத், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஆசைக்கு ஏற்ப சர்வ சமய மாநாடு என்ற வடிவில் வெளிப்பட்டது. ஒரே மேடையில் அனைத்து மதங்களின் வழிகாட்டிகளும் சொற்பொழிவாளர்-களும் தத்தமது மதத்தலைவர்களின் அரும் பணிகளையும் சிறப்புகளையும் எடுத்துரைக்க வேண்டும் என்பதற்கான ஏற்பாட்டை ஜமாஅத் செய்தது.

இந்த மாநாடுகளில் பல்வேறு மதங்களைச் சேர்ந்த மக்கள் மனமகிழ்ச்சியுடன் கலந்து கொள்கிறார்கள். அதனால், ஒருவர் மற்றவர் மீதான நம்பிக்கை மற்றும் கண்ணியத்தின் சூழல் அமைவது மட்டுமல்லாமல், உலகிற்கு அமைதியும் நிம்மதியும் கிடைக்கப் பெறுகிறது. அதன் பின்னணியில் உள்ள சிந்தனை, அஹ்மதிய்யா கிலாஃபத் உடைய வழிகாட்டல் மற்றும் இறைபடைப்பினங்களுடனான அனுதாபம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

உலக அமைதியை நிலைநாட்டுவதற்காக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒரு பொன்னான கோட்பாடு இதுவாகும்: ஓர் அஹ்மதி தனது நாட்டுக்கு நன்றியுணர்வு மிக்கவராக இருக்க வேண்டும். அதன் மேம்பாடு மற்றும் முன்னேற்றத்திற்காக கடும் முயற்சி செய்ய வேண்டும். தனது நாட்டின் அரசாங்கத்துக்கு எதிராக எந்தவொரு கிளர்ச்சி, குழப்பம் அல்லது ஆர்பாட்டங்களில் அவர் பங்கெடுக்கக் கூடாது.

உலகின் பல நாடுகளில் அஹ்மதிய்யா ஜமாஅத் பொது மக்களின் எதிர்ப்பு மட்டுமல்லாமல், அரசாங்கத்தின் அடக்குமுறையையும் எதிர்கொள்ள வேண்டி உள்ளது. ஜமாஅத் எல்லாவிதமான மனித உரிமைகள் மற்றும் குடிமகன் உரிமைகளை விட்டும் விலக்கி வைக்கப்படுகிறது. வற்புறுத்தல், கொடுங்கோன்மை, சிறையில் அடைக்கப்படுதல், கொல்லப்படுதல் மற்றும் பயங்கரவாதம் ஆகியவை வழக்கமாகி விட்டன. ஆனால், ஜமாஅத்தின் வரலாறு எந்தவித குழப்பத்தை விட்டும் தூய்மையானதாக உள்ளது. அஹ்மதிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மற்றும் அஹ்மதிய்யா கலீஃபாக்களால் கற்றுக் கொடுக்கப்பட்ட வழியில் சென்றிருக்கவில்லை என்றால், இந்த அமைதி ஏற்பட்டிருப்பது ஒருபோதும் சாத்தியம் ஆகாது.



அரை நூற்றாண்டுக்கும் மேலாக, ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கிலாஃபத் அரியணையில் வீற்றிருந்தார்கள். ஓர் உலகமே அவர்களிடம் இருந்து பயனடைந்திருக்கிறது. சமுதாயங்கள் அன்னாரிடம் இருந்து பரக்கத் பெற்றது மட்டுமல்ல, இன்னும் கூறுவதாயின், அம்மக்களுக்கு அமைதியும் சமாதானமும் கிடைப்பதற்கான அனைத்து முயற்சிகைளயும் கூட ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் நிரந்தரமாக மேற்கொண்டார்கள். அரசியல், சமுதாயம், மார்க்கம் மற்றும் பாதுகாப்பு என, சுருக்கமாகக் கூறுவதாயின், எல்லாத் துறையிலும் அன்னார் அமைதி மற்றும் நீதிக்கான கோட்பாடுகளை எடுத்துரைத்தார்கள். முன்னேற்றங்கள் மற்றும் புரட்சிகள் ஆகியவற்றின் மைல்கல்களும் ஒரு கடுமையான அமைதியின்மை மற்றும் நிம்மதியின்மை எனும் அலையும் கூட உலகை சூழ்ந்திருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் பரவியிருந்த அமைதியின்மையை அரசியல் ரீதியாக முடிவுக்குக் கொண்டு வருவதில் தமது பங்கை அளித்ததோடு மட்டுமல்லாமல், அதற்கும் மேற்பட்டு, மார்க்க ரீதியாகவும் மேலான தொண்டுகளை ஆற்றினார்கள். காஷ்மீரின் முஸ்லிம்களின் வாழ்வை மாற்றியமைப்பதிலிருந்து, பாலஸ்தீனத்தின் மக்களுக்கு வழிகாட்டல் வழங்குவது வரை, இந்தியா-பாக் பிரிவினையிலிருந்து, ஐக்கிய சமுதாயங்களின் அடிப்படை சாசனம் தொடர்பான வழிகாட்டல் வழங்குவது வரை, எல்லா இடங்களிலும் அன்னார் அமைதிக் குழுவின் தளபதியாகத் தென்படுகிறார்கள். அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மேற்கொண்ட இடைவிடாத உழைப்பும் முயற்சிகளும் எந்த அளவு இருக்கின்றன என்றால், இந்தக் குறுகிய நேரத்தில் அவற்றை உள்ளடக்குவது கஷ்டமாகும்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் தனது முன்னோடிகளின் நடைமுறையைத் தொடர்ந்தார்கள். உலகத்திற்கு அமைதியும் சமாதனமும் கிடைப்பதற்காக துஆவிற்காக அறிவித்து வந்தது மட்டுமின்றி, தொடர்ச்சியாக செயல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தார்கள்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் 1967-இல் முஸ்லிம்களின் பல்வேறு பிரிவுகளுக்கிடையில் அமைதி மற்றும் ஒற்றுமையை உருவாக்குவதற்காக இந்த ஆலோசனையை முன் வைத்தார்கள்: முஸ்லிம்களின் பிரிவுகள் அனைத்தும் சில காலங்களுக்குத் தமது அந்தக் கருத்து வேறுபாடுகளை முதுகுப் பின்னால் வீசியவாறு, இஸ்லாத்தின் தப்லீஃக் செய்தல் மற்றும் அதைப் பரப்புதலில் இணைந்து முயற்சி செய்யுங்கள். (நூல்: தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 24 பக்கம்)

இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் அமைதியை விரும்பும் ஜமாஅத்தாக உலகம் முழுவதும் பிரசித்திப் பெற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டும் உள்ளது. அமைதியை நிலைநாட்டுவதற்காக உலகம் முழுவதும் செய்யப்படும் ஜமாஅத்தின் கடும் முயற்சிகள் நன்றியுடனும் மதிப்புடனும் காணப்படுகிறது. ஜமாஅத்தின் முழக்கமான Love for all, Hatred for none என்பது அதிகம் புகழப்படுகிறது. அதாவது, எல்லாரிடத்தும் அன்பு, எவரிடத்தும் வெறுப்பு இல்லை. அமைதி மற்றும் சமாதானத்துக்கான இந்த முழக்கம் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் அருளுக்குரிய நாவினாலேயே கூறப்பட்டது. அதை ஹுஸூர் (ரஹி) அவர்கள் 1980-இல் ஸ்பெயின் மண்ணில் கூறினார்கள். வெறுப்புகளால் நிறைந்திருந்த உலகில், அன்பிற்கான இந்த பொது அறிவிப்பு காரணமாக, மேற்கத்திய நாடுகள் ஹுஸூர் (ரஹி) அவர்களை அன்பின் தூதுவர் என்ற பெயரால் நினைவு கூர்ந்தது.

ஆனால், உலகை எச்சரிப்பதைப் பொறுத்தவரை, ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இன்றிலிருந்து 55 ஆண்டுகளுக்கு முன், ஜூலை 28, 1967 அன்று London-இன் Wandsworth Towen Hall-இல் 'அமைதிக்கான தூதுச் செய்தி மற்றுமோர் எச்சரிக்கைச் சொல்' என்ற தலைப்பில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சொற்பொழிவை ஆற்றினார்கள். அதில் ஹுஸூர் (ரஹி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப ஒரு மூன்றாம் உலகப் போரைப் பற்றி எச்சரித்தார்கள். அன்னார் அதன் பயங்கரமான அழிவைப் பற்றிக் கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இந்த மேற்கோளை முன்வைத்தார்கள்:

அமெரிக்கா போன்ற நாடுகளில் பயங்கரமான நிலநடுக்கம் வந்துள்ளது. ஆனால், உங்கள் நாடு அவற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்கிறது என்று எண்ணாதீர்கள். அவர்களை விட அதிகமான துயரத்தை நீங்கள் பார்க்கக்கூடும் என்பதை நான் காண்கிறேன். ஐரோப்பாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை! ஆசியாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை! தீவுகளில் வாழக் கூடியவர்களே! எந்த செயற்கையான இறைவனும் உங்களுக்கு உதவ மாட்டான். நான் நகரங்கள் விழ்வதைக் காண்கிறேன். மக்களின் வசிப்பிடங்கள் வெறிச்சோடிப் போவதைக் காண்கிறேன்.

அந்த ஏக இறைவன் ஒரு காலம் வரை மௌனமாக இருந்தான். அவனது கண்களுக்கு முன் அருவருக்கத்தக்க பணிகள் செய்யப்பட்டன. மேலும், அவன் மௌனமாக இருந்தான். ஆனால், இப்போது அவன் தனது அச்சுறுத்தும் முகத்தைக் காட்டுவான். எவர்களிடம் கேட்கும் காதுகள் உள்ளனவோ கேட்டுக் கொள்ளுங்கள். அந்த நேரம் தொலைவில் இல்லை. இறைவனின் பாதுகாப்பின் கீழ் அனைவரையும் ஒன்றிணைப்பதற்கு நான் முயற்சி செய்தேன். ஆனால், நிர்ணயிக்கப்பட்ட இறைநியதி நிறைவேறுவது அவசியமானதாக இருந்தது. இந்த நாட்டுக்கும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று நான் உண்மையாகவே கூறுகிறேன்.

நூஹ் நபியின் காலம் உங்கள் கண் முன் வந்து விடும். லூத் நபியின் மண்ணில் நடந்த சம்பவத்தை நீங்கள் உங்கள் கண்களாலேயே கண்டு விடுவீர்கள். ஆனால், இறைவன் மெதுவாகவே சினம் கொள்கிறான். உங்கள் மீது கருணை காட்டப்படும் பொருட்டு நீங்கள் தவ்பா செய்யுங்கள். இறைவனை விடுபவர் மனிதர் அல்ல. மாறாக, அவர் ஒரு புழு ஆவார். அவனுக்கு அஞ்சாதவர் உயிருல்லவர் அல்ல. மாறாக, மரணித்தவர் ஆவார். (ஹகீகத்துல் வஹீ பக்கம் 256-257 - தாரீகே அஹ்மதிய்யத் பாகம் 24 பக்கம்135-140)

நான்காவது கிலா∴பத் காலகட்டத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்குக் கடுமையான துன்பங்களையும் துயரங்களை -யும் எதிர்கொள்ள நேரிட்டது. அரசு அடக்குமுறை ஒரு புதிய வடிவில் முன்வந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலும், ஜமாஅத் தன்னுடைய அமைதியை விரும்பும் கொள்கை மற்றும் போதனையில் நிலைத்திருந்தது மட்டுமல்லாமல், அதற்கும் மேற்பட்டு, அஹ்மதிய்யா கிலா∴பத்தின் மூலமாக, உலகளாவிய அமைதி மற்றும் சமாதானத்திற்கான முயற்சிகளின் ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கியது.

ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் 1990-இல் ‘இஸ்லாம் மற்றும் தற்கால பிரச்சனைகளுக்கான தீர்வு’ என்ற தலைப்பில், ஒரு கருத்துச் செறிவுள்ள சொற்பொழிவு ஆற்றினார்கள். அது பிற்காலத்தில் நூல் வடிவிலும் வெளியானது. அதில் ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இனவெறி எனும் தொற்று நோயைக் குறித்து மனிதர்களை எச்சரித்தவாறு கூறினார்கள்: வருங்காலத்தில், இந்தத் தொற்று நோய் உலக அமைதிக்கு மிகப்பெரிய ஆபத்தாகத் திகழும். அன்னார் இது பற்றி கவனமூட்டியது மட்டுமல்லாமல், இஸ்லாத்தின் அழகிய போதனையின் மூலமாக இதற்கான தீர்வையும் கூறினார்கள். அன்னார் கூறினார்கள்:


‘எந்த வகையிலும் எந்த மட்டத்திலும் மனிதகுலத்தில் பாகுபாடு ஏற்படுத்துவதனாலும் பாரபட்சமாக நடந்து கொள்வதனாலும் சில மக்கள் தற்காலிகமாகப் பலன் பெற முடியும். ஆனால், இறுதியில் அதனுடைய தொலைநோக்கு முடிவு அனைவருக்கும் நிச்சயமாக தீயதாகவே அமையும் என்பதை நான் நம்புகிறேன். தற்போதைய சூழலை முன்னிறுத்தி, தற்காலத்தின் இந்த சூழ்நிலையில் மிகவும் தாக்கம் ஏற்படுத்தும் அளவில் பங்கு வகிக்கக்கூடிய, ஒரு தெளிவான மற்றும் நம்பிக்கையை அதிகரிக்கும் தூதுச்செய்தியை இஸ்லாம் வழங்குகிறது. இஸ்லாம் இனவெறி மற்றும் வர்க்க வெறுப்பை வன்மையாகக் கண்டிக்கிறது. குழப்பம் எந்த வடிவத்தில் இருந்தாலும் அதை கண்டிக்கத்தக்கதாகக் கருதுகிறது. (காதியான் பத்ர் வார இதழ், டிசம்பர் 19.∴26,2013 பக்கம் 26)

ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் அமைதி தொடர்பான இந்த சொற்பொழிவு, எப்படிப்பட்ட முழுமையான செயல்திட்டத்தை உள்ளடக்கி இருக்கிறது எனில், இதில் அன்னார் உலகளாவிய அமைதியின் வழியில் தடையாக இருக்கக்கூடிய எல்லாப் பிரச்சனைகளையும், அவற்றிற்கு, தாக்கத்தை விளைவிக்கக் கூடிய தீர்வுகளையும் கூறி விட்டார்கள். இதில் உலக மதங்களுக்கு இடையிலான அமைதி மற்றும் சமாதானம், நல்லிணக்கத்தின் முறை குறித்து கூறப்பட்ட அதே வேளையில், சமூக அமைதி, பொருளாதார ரீதியிலான அமைதி, தேசிய மற்றும் சர்வதேச அமைதி மற்றும் தனிநபர் அமைதி ஆகிய அனைத்து அம்சங்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது.



நான்காவது கிலா∴பத் காலகட்டத்தில் அஹ்மதிய்யா ஜமாத்திற்கு முன்பைவிட உலகளாவிய பிரபல்யம் மற்றும் வெற்றி கிடைத்தது. அமைதியை நிலைநாட்டுவதற்கான ஜமாஅத்தின் முயற்சிகளையும் இடைவிடாத உழைப்பையும் ஓர் உலகம் பாராட்டியது. மேலும், அவர்கள் அதிலிருந்து பலன் அடைந்தார்கள். இயற்கைப் பேரழிவுகளிலும் பெரும் துன்பங்களிலும் உலகிற்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளின் தீர்வுக்காக Humanity First நிறுவப்பட்டதாக இருக்கட்டும்! அல்லது ஆ∴ப்ரிக்காவின் தொலைதூரப் பகுதிகளில் மருத்துவமனைகளைக் கட்டியதாக இருக்கட்டும்! ஆக, அஹ்மதிய்யா கிலா∴பத் அமைதி மற்றும் சமாதானத்தை வழக்கப்படுத்துவதில் எந்தக் குறையும் வைக்கவில்லை.

ஐந்தாவது கிலா∴பத்தின் தொடக்கத்திலிருந்தே ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் வழிகாட்டல் மற்றும் கண்காணிப்பில் பொது அமைதிக்காக எல்லாத் திசைகளிலும் இடைவிடாத உழைப்பும் முயற்சியும் தொடர் -கிறது. இன்று உலகம் அமைதிக்காக ஏங்குகின்றது. மூன்றாம் உலகப் போருக்கான மேகங்கள் மேலே சுற்றிக் கொண்டிருக் -கின்றன. அமைதியின் இந்தத் தூதுவர் உலகிற்கு மீண்டும் மீண்டும் அமைதியின் பக்கம் அழைப்பு விடுக்கிறார். அந்த முயற்சிகளின் சிறு துளியைத் தங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.



ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கிலா∴பத் அரியணையில் அமர்ந்த உடனேயே, பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது குத்பாக்களின் மூலம், உலகிற்கு ஏற்படவிருக்கும் பிரச்சனைகளைக் கோடிட்டுக் காட்டியவாறு, குறிப்பாக, ஜமாஅத் மக்களையும், பொதுவாக, முழு உலகையும் பார்த்துக் கூறினார்கள். உலகம் முழுவதிலும் அமைதியை நிலைநாட்ட முயற்சி செய்ய வலியுறுத்தி -னார்கள். இஸ்லாத்தின் அமைதி மற்றும் சமாதானத்தின் பொலிவான, அழகியபோதனையை உலகின் முன் வைக்குமாறு ஜமாஅத்திற்கு வலியுறுத்தினார்கள். மேலும், பிரச்சனைகள் தீர்வதற்காக துஆக்கள் செய்யுமாறு பலமுறை வலியுறுத்தினார்கள்.

உலக அமைதியை நிலைநாட்டுவதற்காக உலகத்தின் பெரும் பெரும் அரசர்களுக்கும் அதிகாரத்தில் இருப்பவர் -களுக்கும் கடிதங்கள் மூலமாகக் கூறுவது, ஐந்தாவது கிலா∴பத்தின் அரும் பணிகளின் ஒரு பசுமையான மற்றும் வரலாற்று அம்சமாகும். ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் முழு உலகிலும் உள்ள தலைவர்கள் அனைவருக்கும், உலகிற்கு ஏற்படவிருக்கும் உலகளாவிய ஆபத்துக்களை முன்னிறுத்தி 2012-ல் அமைதியை நிலைநாட்டுவதற்காக நல்ல முறையில் ஒத்துழைப்பு வழங்கவும் முயற்சிகள் மேற்கொள்வதற்கும் கடிதங்கள் எழுதினார்கள். ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் இந்த அனைத்துக் கடிதங்களும் அதற்குப் பிறகு வெளியிடப்பட்டன. இந்த உலகத் தலைவர்களின் பெயருக்கு எழுதிய கடிதங்களில் ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் உன்னதமான ஹிக்மத்தை மேற்கொண்டவாறு, மாநபி (ஸல்) அவர்களின் நடைமுறையைப் பின்பற்றிய வண்ணம் அந்தத் தலைவர் -களுக்குப் புரிய வைத்தார்கள் என்பது அந்தக் கடிதங்களிலிருந்து தெரிய வருகிறது.

ஆ∴ப்ரிக்காவில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துதல் மற்றும் ஆப்பிரிக்கா நாடுகளின் முன்னேற்றத் -திற்காக ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் நிகரற்ற முயற்சிகள் மற்றும் துஆக்களுக்கான ஒரு உதாரணத்தை மட்டும் முன் வைக்கிறேன்.

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் 2008-ல் கானா சென்றபோது கானாவின் தலைவரான John Koufor அவர்கள் ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் வருகையினால் நல்ல எண்ணங்களை வெளிப்படுத்தியவாறு இவ்வாறு கூறினார்கள்: கானா உங்கள் நாடாகும் எங்கள் நாட்டுக்காக தங்களுடைய துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன. நாங்கள் அந்த துஆக்களின் பலனையும் காண்கிறோம். கடந்த சுற்றுப்பயணத்தின் போது தாங்கள் கானாவின் மண்ணில் இருந்து எண்ணெய் வெளிவரும் என்று கூறியிருந்தீர்களே தங்களுடைய இந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது. கானாவின் மண்ணிலிருந்து எண்ணெய் வெளி வந்தது. இது ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களுடைய துஆ ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான ஒரு மகத்தான அடையாளமாகும்.

மார்ச் 8, 2012-ல் ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவைப் பார்த்துக் கூறினார்கள்: உலகில் அமைதி மற்றும் சமாதானம் சீர்குலைந்து போகும் நிலையைப் பார்த்து, நான் தங்களுக்கு இந்தக் கடிதத்தை அனுப்பி வைப்பதை அவசியமாகக் கருதினேன். ஏனெனில், தாங்கள் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தலைவராக உள்ளீர்கள். மேலும், இது ஒரு வல்லரசு நாடாகும்.

நான் தங்களிடம், இன்னும் கூறுவதென்னவென்றால், அனைத்து உலகத் தலைவர்களிடமும் கேட்டுக் கொள்வதாவது, உலகத்தில் அமைதியை நிலைநாட்டுவதில் தங்களுடைய பங்கை செலுத்துங்கள். அல்லாஹ் தங்களுக்கும் மற்ற அனைத்து உலகத் தலைவர்களுக்கும் இந்தத் தூதுச் செய்தியைப் புரிவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! (இலண்டன் அல்∴பஸ்ல் இன்டர்நேஷனல் வார இதழ், ஜுன் 8, 2012 பக்கம் 11, 12)

இந்த அனைத்துக் கடிதங்களையும் படிப்பதன் மூலம், ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் எவ்வளவு வேதனையுடன் உலக அமைதிக்காக கடும் முயற்சிகள் செய்கிறார்கள் என்ற விஷயம் தெள்ளத்தெளிவாக வெளிப்பட்டு விடுகிறது. ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத் ஏற்பாட்டின் கீழ் (நடைபெற்ற) ஒன்பதாவது அமைதி கருத்தரங்கில் உரை நிகழ்த்தியவாறு கூறினார்கள்: அவர்கள் என்னுடைய கடிதங்களுக்கு முக்கியத்துவம் எதுவும் கொடுப்பார்களா, மாட்டார்களா என்று எனக்குத் தெரியாது. ஆனால், அவர்களுடைய எதிர் நடவடிக்கை எதுவாக இருந்தாலும் சரி! நான் காலத்தின் கலீ∴பா என்கிற வகையிலும் இலட்சக்கணக்கான அஹ்மதிகளின் ஆன்மிகத் தலைவர் என்கின்ற அந்தஸ்திலும் அஹ்மதிகளின் உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகளின் பிரதிநிதியாக உலகத்தின் கடும் பயங்கரமான நிலைமைகளைப் பற்றி எச்சரித்து விட்டேன். (இலண்டன் அல்∴பஸ்ல் இன்டர்நேஷனல் வார இதழ், ஜுன் 22, 2012 பக்கம் 11, கட்டம் 1)

ஆக, அஹ்மதிய்யா ஜமாஅத் ஒவ்வொரு கால கட்டத்திலும் முழு உலகிலும் அமைதி கருத்தரங்கங்களை நடத்தியுள்ளது. இந்தக் கருத்தரங்கங்களின் நோக்கம், இன்றைய கவலை தோய்ந்த உலகத்திலே, அமைதிக்கான திட்டங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதாகும். ஆனால், உலகின் தற்போதைய அபாயகரமான நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, ஐந்தாவது கிலா∴பத்தின் காலகட்டத்தில், இந்தக் கருத்தரங்குகள் துரிதமாக அதிகரித்தன. இங்கு அந்த அனைத்துக் கருத்தரங்குகள் பற்றியும் விளக்கமாக என்ன! சுருக்கமாகக் கூறுவது கூட அசாத்தியமாகும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தமது கிலா∴பத்தின் ஒவ்வோர் ஆண்டும் பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத், அமைதி கருத்தரங்கு நடத்துவதன்பால் கவனமூட்டினார்கள். கொரோனா தொற்று நோயின் காரணமாக, கடந்த இரண்டு வருடங்கள் தவிர்த்து, இந்த நிகழ்ச்சி இடைவிடாது, பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத் ஆண்டு நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக இருந்து வந்துள்ளது.

இதில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தாமே கலந்து கொண்டு வருகை தந்திருப்பவர்கள் முன் உரை நிகழ்த்துவார்கள். இதைப் பின்பற்றிய வண்ணமே, உலகம் முழுவதிலும் உள்ள ஜமாஅத்துகள் அமைதி மாநாடுகளையும் கருத்தரங்கு -களையும் நடத்துகின்றன. இந்த நிகழ்ச்சிகளில் அரசாங்கத்தில் உயர் பதவி வகிக்கும் அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், நாடுகளின் தூதுவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், நகர மேயர்கள், மதபோதகர்கள், சிந்நதனையாளர்கள் மற்றும் ஏனைய கண்ணியத்திற் -குரியவர்கள் கலந்த கொள்கிறார்கள்.

அவர்கள் தங்களுடைய உரைகளில் உலகத்தில் அமைதியை நிலைநாட்டுதல் என்ற தலைப்பில் இஸ்லாமிய போதனையைச் சான்றாகக் கொண்டு பல கோணங்களில் எடுத்துரைக்கிறார்கள். அஹ்மதிய்யா கிலா∴பத்தின் அமைதியை விரும்புதல் மற்றும் அமைதியை நிலைநாட்டுவதில் பெற்ற வெற்றிகளைப் பாராட்டுகிறார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத் உலகளாவிய அமைதிக்காக மேற்கொண்ட முயற்சிகளில், 'உலகில் எவ்விடத்திலும் எந்த மட்டத்திலும் தனிப்பட்ட முறையிலோ அல்லது குழுவாகவோ அமைதியை நிலைநாட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைப் பாராட்ட வேண்டும்; அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற இந்த ஒரு முயற்சியையும் மேற்கொண்டுள்ளது. ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் அனுமதி மற்றும் வழிகாட்டலுடன் Ahmadiyya Muslim Peace Prize-ஐ ஆரம்பித்தது. இது, அமைதியை நிலை நாட்டுவதற்காக அசாதாரணமான பணி செய்த ஒரு முக்கிய பிரமுகருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ தரப்படுகிறது.

உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்காக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளில் ஒரு மிகப்பெரிய பங்கு அன்னார் பல நாடுகளுக்கு மேற்கொண்ட சுற்றுப் பயணங்கள் ஆகும். இந்தச் சுற்றுப் பயணங்களில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் பன்னாட்டுத் தலைவர்களுடனான சந்திப்புகள், அரசு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கவுன்சிலர்கள், மேயர்கள், மருத்துவர்கள், பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் வாழ்வின் பல துறைகளைச் சார்ந்த கண்ணியத்திற் -குரிய மக்களுடனான சந்திப்புகள் மூலமாக இஸ்லாமிய போதனைப்படி அமைதியின் தூதுச்செய்தியை எட்ட வைத்தார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தமது குத்பாக்களில் இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளை அழகாக எடுத்து வைத்தார்கள். இரண்டாவது, இந்தச் சுற்றுப் பயணங்களில் உலகின் பல நாடுகளில் பாராளுமன்றங்களில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளும் அடங்கும்.

ஹஸ்ரத் அமீருல் மு∴மினீன் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களைக் கௌரவிக்கும் விதமாக பிரிட்டனின் பாராளுமன்ற மாளிகையில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் இரு சபைகளில் இருந்தும் வந்திருந்த பல பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசு அமைச்சர்கள், பல்வேறு நாடுகளின் தூதுவர்கள் மற்றும் இதர கண்ணியத்திற்குரிய மக்களும் கலந்து கொண்டார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தற்போதைய நிலைமைகளை முன்னிறுத்தி மிகவும் நுட்பமான மற்றும் கருத்துச் செறிவுள்ள உரை நிகழ்த்தினார்கள்.

டிசம்பர் 20, 2011-ல் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் விசாலமான ஹாலில் நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் 80-க்கும் மேற்பட்ட ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள், தூதரகப் பிரமுகர்கள், உயர்க்கல்வி கற்ற பிரமுகர்கள் மற்றும் பத்திரிகை நிருபர்கள் மட்டுமின்றி, 16 நாடுகளிலிருந்து ஜமாஅத் அல்லாத விருந்தினர்களும் கலந்து கொண்டார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இந்நிகழ்ச்சியில் கூறினார்கள்: உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கு மனிதன் நிச்சயம் இறைவன் பக்கம் திரும்ப வேண்டும். மேலும், இதுவே அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வாகும்.

உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஜூன் 27, 2012-இல் (CAPITOL HILL) Washington D.C-ல் காங்கிரஸ் மற்றும் செனட்டின் முக்கிய உறுப்பினர்கள் மற்றும் ஊடக நண்பர்களுடன் உரையாற்றினார்கள்.



ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் அமெரிக்க அரசின் இந்தப் பிரதிநிதி -களிடம் உரையாற்றுகையில், அமைதிக்கான வழியை எடுத்து உரைத்தவாறு, நியாயத்தில் நிலைத்து நின்று சமுதாயங்களுக்கு இடையிலான நீதியை அடிப்படையாகக் கொண்ட தொடர்புகளில் அழுத்தம் கொடுத்தார்கள்.

இறைவனால் நியமிக்கப்பட்ட கலீ∴பாக்கள் உலகவாதிகளிடம் எவ்வாறு உரையாற்றுவார்கள் என்பதும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் எவ்வாறு அத்தாட்சியைப் பூர்த்தி செய்த வண்ணம் இந்த உயர்வான சபைகளில் அமைதிக்கான தூதுச் செய்தியை எட்ட வைத்தார்கள் என்பதும் எவ்வாறு வருங்காலத்தின் ஆபத்துகளைக் குறித்து எச்சரித்தார்கள் என்பதும் நிச்சயமாக இந்த உரையைப் படித்தே தெரிந்து விடுகிறது.



சய்யிதுனா ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் AMERICA CAPITOL HILL-ல் சொற்பொழிவு நிகழ்த்திய பிறகு, Democratic Leader கண்ணியத்திற்குரிய Nancy Pelosi அவர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களைப் பற்றி இவ்வாறு கூறினார்:

"தங்களது தலைமைத்துவத்தின் காரணமாக, தாங்கள் உலகில் உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த நபராக உருவெடுத்துள்ளீர்கள். தாங்கள் எல்லைகளைத் கடந்து ஒரு மாபெரும் ஆற்றலாகவும் முன்னேற்றம் அடையும் உலகிற்கு ஒரு மூலதனமாகவும் திகழ்கிறீர்கள். தாங்கள் நுட்பங்களையும் இறையச்சத்தையும் முழுமையாக கொண்ட வழிகாட்டி ஆவீர்கள். தாங்கள் பல்வேறு மதங்களுக் -கிடையில், பயங்கரவாதத்தைத் தவிர்த்து, ஒருவர் மற்றவருக்கு அளிக்க வேண்டிய கண்ணியத்தை ஒரு வெற்றி பெற்றவராக நிலைநாட்டினீர்கள்."

ஜனவரி 29, 2015-ல் பிரித்தானியாவில் ஒரு நிகழ்ச்சியின் போது பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் David Cameron அவர்கள் தமது உரையில் சய்யிதுனா ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களைக் குறித்து இவ்வாறு கூறினார்: சய்யிதுனா ஹுஸூர் அன்வர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அமைதியின் தூதுவர் ஆவீர்கள். தங்களது வெற்றி பணிகள் மற்றும் ஒருவர் மற்றவர் மீது அன்பு நேசம் கொள்வது பற்றிய தங்களது தத்துவமான (எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் வெறுப்பு இல்லை என்பது) பிரித்தானியாவிலும் மற்றும் முழு உலகிலும் இவ்வாறே பரவி வரும் என்று நான் நம்புகிறேன்.

சய்யிதுனா ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மே 11, 2013 அன்று South California-வில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சொற்பொழிவாற்றினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் மாண்பிகு Congress Woman Karen Bass அவர்கள் கூறினார்கள்: தாங்கள் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் நபர் ஆவீர்கள். தாங்கள் முழு உலகிலும் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை முன்னேற்றம் அடையச் செய்துள்ளீர்கள்.

சய்யிதுனா ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களை 2015-ல் Tokyo-வில் வரவேற்றபோது, Tokibo Group of Industries உடைய Chairman Mike Sata Yasuhiko அவர்கள் கூறினார்கள்: "சய்யிதுனா ஹுஸூர் அன்வர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் அவர்கள் தங்களது வாழ்நாள் முழுவதையும் அமைதியை நிலைநாட்டுவதற்காக அர்ப்பணித் -துள்ளீர்கள். மார்க்கங்களுக்கு இடையே அமைதியை நிலைநாட்டுவதே தங்களுடைய வாழ்வின் நோக்கமாகும். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் நிரந்தரமாக ஜப்பானுக்கு வருகை தந்து விட வேண்டும் என்பது எனது ஆசையாகும். அதன் மூலம் எங்கள் நாடும் உண்மையான இஸ்லாத்தின் ஒளியால் பிரகாசம் அடைந்து விடும்."

உலக அமைதிக்கான தூதுச் செய்தியைப் பரப்புவதற்காக, பிரித்தானியா அஹ்மதிய்யா ஜமாஅத் நிலைநாட்டப்பட்ட நூறாண்டு நிகழ்ச்சிகளின் தொடரில் ∴பிப்ரவரி 2014-ல் இலண்டனின் பிரசித்திப் பெற்ற கில்ட் ஹாலில் சர்வ சமய மாநாடு நடத்தப்பட்டது. அதில் தத்தமது புனித நூல்களை அடிப்படையாகக் கொண்டு இறைவன் மற்றும் மார்க்கத்தைப் பற்றிய கொள்கையின் போதனைகளை முன்வைக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு மதங்களின் அறிஞர்கள் அழைக்கப்பட்டனர். இந்த மாநாட்டில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இஸ்லாத்தின் பிரதிநிதித்துவம் வகித்தார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் உரை எத்தகைய பிரமிக்க வைக்கும் காட்சியாக இருந்தது என்றால், அது பார்க்க மற்றும் கேட்க வேண்டியதாகும்! அது வந்திருந்தவர்கள் மீது அசாதாரணமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஸ்பெயினில் பேத்ரோ ஆபாத் உடைய முன்னாள் மேயரான மீகல் கார்ஸியா அவர்கள் இந்த மாநாட்டைப் பற்றி இவ்வாறு கூறினார்கள்: நான் இந்த நிகழ்ச்சியை நடத்தியதற்கு அஹ்மதிய்யா ஜமாஅத்துக்கு வாழ்த்துகள் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஜமாஅத் தனது நோக்கங்களைப் பெறுவதில் வெற்றி பெற்று விட வேண்டும் என்பது எனது ஆசையாகும். நான் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் சாஹிப் அவர்களின் சொற்களால் மிகவும் இன்பம் அடைந்தேன். அன்னார் போர்களிலிருந்து விடுபட்டு ஓர் அமைதி நிறைந்த சமூகத்தைக் கட்டமைப்பது தொடர்பாக உரை நிகழ்த்தினார்கள். எத்தகைய ஒரு சமூகத்தைக் கட்டமைப்பது பற்றி என்றால், அது, நீதி மற்றும் ஒருவர் மற்றவருக்கு கண்ணியமும் மரியாதையும் அளித்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. போரைக்

கைவிடும் ஓர் உலகம் உருவாக வேண்டும், அமைதியை நேசிக்க வேண்டும், அந்த உலகம் அனைவரையும் உடன் அழைத்துக் கொண்டு ஒட்டுமொத்தமான முறையில் முன்னேற வேண்டும். நீதியின்மைக்கு எதிராக நிற்க வேண்டும் மற்றும் சமூக நீதியை வளர்க்க வேண்டும் என்பதற்காகப் பல்வேறு மதத்தைச் சேர்ந்த மக்களை ஓரிடத்தில் ஒன்று திரட்டினார்கள். (ஹுஸ்ரத் ஐந்தாவது கலீ.:.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மார்ச் 7, 2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை)



கனடாவின் முன்னாள் பிரதமர் மாண்புமிகு Stephen Harper அவர்கள் ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்…) அவர்களைப் பற்றிக் கூறினார்கள்: அன்னார் மார்க்க சுதந்திரம் மற்றும் அமைதிக்கான ஒரு வீரமிக்க வெற்றியாளர் ஆவார்கள். அன்னார் இஸ்லாத்தின் உண்மையான நலம் விரும்பி ஆவார்கள்.

கனடாவின் தற்போதைய பிரதமர் மாண்புமிகு Justin Trudeau அவர்கள் சய்யிதுனா ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களைப் பற்றிக் கூறினார்கள்: அன்னார் உடனிருப்பதும், அன்னாருடைய வழிகாட்டல்களும் கனடாவிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

அஹ்மதிய்யத்தின் கலீ.:.பாக்கள் உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்காக வழிவகைகளை நியாயமான முறையில் விநியோகித்துக் கொடுப்பதன் பால் அனைவருக்கும் கவனமூட்டினார்கள். ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மக்களுக்குக் குறிப்பாக, 'இழப்பிற்காளான வர்கம் வரை, அடிப்படை வசதிகளை எட்ட வைப்பதன்' பாலும் கவனமூட்டினார்கள். அப்போதுதான் அவர்களின் துன்பங்களும் அகலும். இந்த வர்கத்தினரிடம் இழப்பிற்காளா-வதற்கான அந்த மனப்பான்மையும் நீங்கும். இந்த ஓர் அம்சத்தின் மீது மட்டுமே பார்வையை செலுத்தினால், ஒவ்வோர் ஆண்டும் ஜமாஅத்திற்குப் பல நாடுகளில் இலட்சக்கணக்கான டாலர்களை செலவு செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைக்கிறது.

அதில் குடிப்பதற்கான தூய்மையான தண்ணீரைக் கிடைக்கச் செய்தல், மருத்துவமனைகளை நிறுவுதல், இலவச மருத்துவ முகாம்கள், அனாதை குழந்தைகளுக்கான வசிப்பிடங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் பல்வேறு தொழில் நுட்ப கல்வி நிறுவனங்களை நிறுவுதல், ஏழைப் பிள்ளை-களுக்கான கல்வி உதவித் தொகைகள், ஏழைகளுக்கு வீடுகள் அமைத்துத் தருதல், பசித்தவர்களுக்கு உணவைக் கொண்டு சேர்த்தல், இயற்கைப் பேரழிவுகளின் போது சந்தர்ப்ப இடத்தில் சாத்தியமான எல்லா உதவிகளையும் செய்தல் மற்றும் துன்பத்தில் ஆழ்ந்துள்ள மனிதர்களுக்கு சாத்தியமான எல்லா விதத்திலும் உதவி புரிதல் ஆகியவை அடங்கும். நிச்சயமாக இந்த முயற்சிகளால், ஒரு சமூகம் கட்டமைக்கப்-படுகிறது. அதனால், இழப்பிற்காளான வர்க்கங்கள் உலகில் பயனுள்ளவர்களாக மாறுகிறார்கள். உலகம் முழுவதும் அமைதி மற்றும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அஹ்மதிய்யா கிலா.:.பத் மேற்கொள்ளும் சர்வதேச அளவிலான முயற்சிகளினால் இந்த அனைத்துப் பணிகளும் நடைபெறுகின்றன.

உலகின் தற்போதைய நிலையில் உலகப் போரைக் குறித்து எச்சரித்த வண்ணம் ஹுஸ்ரத் அமீருல் மு.:.மினீன் ஐந்தாவது கலீ.:.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்-கள்: வரப்போகும் உலகப் போரின் விளைவுகள் மற்றும் அது ஏற்படுத்தும் விசாலமான அழிவுகள் அந்தப் போர் வரை அல்லது தற்போதைய சந்ததிகள் வரை மட்டுமே இருக்காது. மாறாக, அதன் அபாயகரமான விளைவுகள் வரக்கூடிய பல சந்ததிகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது ஓர் உண்மையாகும்.

பிறகு, இத்தகைய போரின் அபாயகரமான விளைவுகள் மற்றும் அதன் பாதிப்புகள் புதிதாகப் பிறந்துள்ள மற்றும் எதிர்காலத்தில் பிறக்கவிருக்கும் குழந்தைகள் மீதும் இருக்கும். தற்போது உள்ள புதிய ஆயுதங்கள் எந்த அளவு நாசம் விளைவிக்கக் கூடியவை என்றால், எதிர்காலத்தில் பிறக்கும் பல சந்ததிகளின் உடல்களில் அதன் அபாயகரமான விளைவுகள் வெளிப்படும். எனவே, உலக நாடுகள் தற்போதைய இந்த சூழலில் மிகவும் கவலை கொள்ள வேண்டும். விழித்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால், அவர்களின் தீய செயல்கள் அவர்களின் தீய முடிவுக்கும் அழிவுக்கும் காரணம் ஆகிவிடும்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்களாகிய நாம் உலகத்தையும் மனித குலத்தையும் அழிவில் இருந்து காப்பாற்றுவதற்காக நமது உச்சகட்ட முயற்சிகளை செய்து வருவோம். காரணம், நாம் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளோம். அவரை இறைவன் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆக அனுப்பியுள்ளான். அவர் இறைத்தூதர் ஹுஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் அடிமையாக இருந்தார். உலகின் நன்மைக்காக வருகை தந்தார். (ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மார்ச் 24, 2012 அன்று மார்டனில் உள்ள பைத்துல் .:.புதூஹ் பள்ளிவாசலில், ஒன்பதாவது அமைதி கருத்தரங்கில் ஆற்றிய உரையின் சுருக்கம்) World Crises and Pathway to Peace பக்கம் 40 முதல் 45 வரை)

அஹ்மதிய்யத்தின் வரலாறு இது போன்ற எண்ணற்ற சம்பவங்களால் நிறைந்து கிடக்கிறது. அதில் நேர்வழி பெற்ற அஹ்மதிய்யா கிலா.:.பத் முழு முயற்சிகள் மற்றும் துஆக்களின் மூலம் முஸ்லிம் சமுதாயம் மற்றும் மனித குலத்தின் ஒற்றுமைக்காகவும் அமைதியை நிலைநாட்டு-வதற்காகவும் கடும் முயற்சி மேற்கொண்டு வந்துள்ளது.

உலகம் இறைவனால் அனுப்பப்பட்டவரை அடையாளம் காண்பதில் இப்பொழுது இன்னும் தாமதிக்காமல் இருக்கட்டுமாக! இவ்வாறு இந்தப் பாதுகாப்புக் கோட்டை அவர்களை நான்கு திசைகளிலிருந்தும் அரவணைத்துக் கொள்ளட்டுமாக! மேலும், அவர்களின் நிரந்தர ஈடேற்றத்திற்குக் காரணமாக அமையட்டுமாக! ஆமீன்

உண்மையுடன் என் பக்கம் வாருங்கள்!<br>
இதிலேயே நன்மை உள்ளது.<br>
எல்லாப் புறமும் காட்டு விலங்குகள் இருக்கின்றன!<br>
நானே பாதுகாப்பு அரண் ஆவேன்.

# ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் படைப்பினங்கள் மீதிருந்த அனுதாபம்

ஃபரீத் அஹ்மத் நவீத் ஸாஹிப்
(Principal, Jamia Ahmadiyya International, Ghana)

தமிழாக்கம்: இப்னு வஸீம்

நம் எஜமானரும் தலைவருமான ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்த.ஃ.பா (ஸல்) அவர்கள் ஒருமுறை ஒரு சபையில் வீற்றிருந்த போது, முன்னாலிருந்து ஒரு ஜனாஸா சென்றது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் தமது உரையாடலை நிறுத்தி விட்டு அந்த ஜனாஸாவின் மரியாதைக்காக எழுந்து விட்டார்கள். உடனிருந்த சஹாபா பெருமக்களும் அவ்வாறே செய்தார்கள். அந்த ஜனாஸா கடந்து சென்றதும், சபையில் இருந்த ஒரு நபர், 'ஹுஸூர் (ஸல்) அவர்களே இது ஓர் யூதனின் ஜனாஸா ஆயிற்றே!' என்று பணிவுடன் கேட்டார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் இதைக் கேட்டதும், 'அவர் யூதர் என்றால் என்ன! அவர் மனிதர் இல்லையா?' என்று கேட்டார்கள். (ஆதாரம்: சஹீஹ் புகாரி கிதாபுல் ஜனாயிஸ் ஹதீஸ் எண் 1311-1312)

வெளிப்படையாக, ஒரு சிறு வாக்கியமாகத் தெரியக் கூடிய இது, இன்றைய நாகரிகமான உலகம், அதனால் உருவாக்கப்பட்டுள்ள மனித உரிமைகளின் கோட்பாடுகள் மற்றும் உலகளாவிய மனித உரிமைகளின் ஆயிரக் -கணக்கான பக்கங்களைக் கொண்ட சாசனத்தின் சாராம்சமாகத் தென்படுகிறது. இந்த நிகழ்வு நமக்கு, மனித குலத்திற்கு கண்ணியமும் மதிப்பும் அளிப்பதற்கான ஒரு முன்மாதிரியைக் காட்டுகிறது. மத இன வேறுபாடு நாம் நமது மார்க்க வேறுபாடுகளின் அடிப்படையில், மனிதகுலத்திற்கான உரிமைகளை விட்டே கவனமற்றவர்களாகி விடுவதற்கு நமக்கு ஒருபோதும் அனுமதியளிப்பதில்லை என்பதை இது தெரிவிக்கிறது. ஒருவர் ஹிந்துவாக இருக்கிறார் என்றால், அதனால் என்ன? ஒருவர் முஸ்லிமாக இருக்கிறார் என்றால், அதனால் என்ன? ஒருவர் யூதராகவோ அல்லது கிறிஸ்தவ -ராகவே இருக்கிறார் என்றால், அதனால் என்ன வந்தது?

ஏனெனில், திருக்குர்ஆன் நமக்கு, 'மனிதன் தனது துவக்கத்தில் ஒரே இயல்பிலிருந்து படைக்கப்பட்டான். பொதுவான உரிமைகள் அடிப்படையில் எல்லா மனிதர்களும் சமமானவர்கள் ஆவார்கள். அனைவரும் கண்ணியம் வழங்குவதற்கு உரிமையாளர்கள்' என்பதைப் புரிய வைக்கிறது. இது குறித்து, சூரா அல் ஹுஜுராத்தின் இந்த வசனத்தில் உள்ளது:

يَآَيُّهَا النَّاسُ اِنَّا خَلَقْنٰكُمْ مِّنْ ذَكَرٍ وَّ اُنْثٰى وَجَعَلْنٰكُمْ شُعُوْبًا وَّ قَبَآىِٕلَ
لِتَعَارَفُوْا ؕ اِنَّ اَكْرَمَكُمْ عِنْدَاللّٰهِ اَتْقٰكُمْ ؕ اِنَّ اللّٰهَ عَلِيْمٌ خَبِيْرٌ

பொருள்: மக்களே! நிச்சயமாக நாம் உங்களை ஆண் பெண்ணிலிருந்து படைத்துள்ளோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்காக, நாம் உங்களைக் கோத்திரங் -களாகவும் இனங்களாகவும் ஆக்கியுள்ளோம். நிச்சயமாக உங்களில் அதிகம் இறையச்சம் கொண்டவரே அல்லாஹ்வின் பார்வையில் அதிக கண்ணியத்திற்குரியவர் ஆவார். நிச்சயமாக அல்லாஹ் எல்லாம் அறிந்தவனும் எல்லாம் உணர்ந்தவனும் ஆவான். (49:14)

ஆனால், மனிதன் ஒட்டுமொத்தமான முறையில் இந்தப் பாடத்தை மறந்து விட்டான் என்பது மிகவும் பேறிழிந்த நிலையாகும். அவன் வரைபடத்தில் வரையப்பட்டுள்ள சில கோடுகளை இறை நியதிகள் எனக் கருதி அமர்ந்துள்ளான். புவியியலை மனிதர்கள் உருவாக்கினார்கள். ஆனால், மனிதர்களை அனைவரின் எஜமானன் ஆன அந்த இறைவன் படைத்துள்ளான் என்பதை அவன் மறந்து விட்டான்.

இன்று உலகில் முஸ்லிம்கள் என்ன, யூதர்கள் என்ன, கிறிஸ்தவர்கள் என்ன, பிற மதங்களை ஏற்றுக் கொள்பவர்கள் என்ன! அனைவரும் எத்தகைய ஒரு குறுகிய பார்வைக்கு இரையாகி விட்டார்கள் என்றால், மனித உரிமைகளை சீர்குலைப்பதற்கான தீர்மானங்கள், புவியியல் மற்றும் சமுதாய விவகாரங்களை முன் வைத்து செய்யப்படுகின்றன. உலகத்தில் இருநூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளின் தத்தமது கொடிகளும் அடையாளங்களும் இருக்கின்றனதான். ஆனால், முழு உலகிலும் மனிதத்தின் கொடி, மனிதகுலத்துக்கான கொடி எங்கும் தென்படுவதில்லை. ஒருவேளை இதனால் தானோ என்னவோ! சிலவேளை புவியியல் கோட்டுக்கு ஒருபுறம் மரணிக்கக்கூடிய மக்கள் வெறும் எண்ணிக்கையாகக் கணக்கிடப்படுகிறார்கள். அவர்களுக்கு எந்த அடையாளமும் இருப்பதில்லை. அதே வேளையில், கோட்டுக்கு மறுபுறத்து மக்கள் எண்களுக்குப் பதிலாக தாய், தந்தை, சகோதரி, சகோதரன், மகள், மகன்கள் போன்ற உறவுகளால் அறியப்படுகிறார்கள்.

அநீதியிழைப்பவர்களின் கொடுமைகளுக்கு சட்டத்தின் பாதுகாவலர்கள் என்றும், ஒடுக்கப்பட்டவரின் பெருமூச்சுக்கு ஏச்சுப் பேச்சு என்றும் பெயர் வைக்கப்படுகிறது. அங்கு, உதவிக்காக வரும் உணவு முதலில் வந்து சேருமா அல்லது மரண ஒலி முதலில் வந்து சேருமா என்பது கூட தெரிவதில்லை. அந்த அநீதியில் ஒவ்வொரு பக்கத்தில் இருந்தும் இன்றைய காலத்து மனிதன் ஒட்டுமொத்தமான முறையில் இணைந்துள்ளான். இந்தக் காலத்தைப் பற்றியே சாட்சி பகர்ந்தவாறு இன்றிலிருந்து 1400 ஆண்டுகளுக்கு முன்பு திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

وَالْعَصْرِ ۝٢ اِنَّ الْاِنْسَانَ لَفِىْ خُسْرٍ ۝٣ அதாவது, காலம் சாட்சியாக இருக்கிறது. நபியின் மீது நம்பிக்கை கொண்டவர்களைத் தவிர, (பிற) மனிதன் பெரும் இழப்பில் இருக்கின்றான் என்று காலம் சான்று பகர்கிறது. ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இந்தக் கருத்தையே இவ்வாறு கூறியுள்ளார்கள்:

இறைவன் இந்த உலகத்தை ஒரு நாளாக நிர்ணயித்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலகட்டத்தை அஸ்ர் தொழுகையுடன் ஒப்பிட்டுள்ளான். பிறகு, ஹஸ்ரத்

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலம் அஸ்ர் தொழுகையானது என்றால், இப்பொழுது 1324 ஆண்டு -களுக்குப் பிறகுள்ள இந்தக் காலத்துக்கு என்ன பெயர் வைக்க வேண்டும்? இந்த நேரம் சூரியன் மறைவதற்கு அருகிலுள்ள நேரம் இல்லையா? மறைவதற்கு அருகில் உள்ள நேரமாக ஆனபோது, பிறகு மஸீஹ் தோன்றுவதற்கு இது நேரமில்லை என்றால், இதற்குப் பிறகோ வேறு எந்த நேரமும் இல்லை. (ஹகீகத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 257)

எனவே, எவர் இந்தக் காலகட்டத்தில் ஈமானை சுரய்யா எனப்படும் நட்சத்திரத்திலிருந்து திரும்பிக் கொண்டு வரவேண்டியிருந்ததோ, இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை உள்ளங்களில் பதிய வைக்க வேண்டியிருந்ததோ மற்றும் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த.்.பா (ஸல்) அவர்கள் ஹஜ்ஜத்துல் விதா(இறுதி ஹஜ்)வின் போது செய்த அறிவுரையை நினைவூட்ட வேண்டியிருந்ததோ அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றுவதற்கான காலம் இந்தக் காலம் ஆகும். பெருமானார் (ஸல்) அவர்கள் செய்த அந்த அறிவுரையாவது, மக்களே! உங்கள் இறைவனும் ஒருவன் ஆவான். உங்கள் தந்தையும் (ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும்) ஒருவர் ஆவார். எனவே, விழிப்புணர்வுடன் கேட்டுக் கொள்ளுங்கள்! எந்த அரேபியருக்கும் அரேபியர் அல்லாத எவர் மீதும், அரேபியர் அல்லாத எவருக்கும் எந்த அரேபியர் மீதும், எந்த வெள்ளையருக்கும் எந்தக் கருப்பர் மீதும், எந்தக் கருப்பருக்கும் எந்த வெள்ளையர் மீதும் எந்தச் சிறப்பும் கிடையாது. அவர்களில் எவர் ஒருவர் தனது சொந்த நன்மையின் காரணமாக முன்னேறி விடுகிறாரோ அவரே சிறந்தவர் ஆவார். (முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் ஹதீஸ் எண் 4568)

உண்மை என்னவென்றால், திருக்குர்ஆனின் முதல் வசனத்திலேயே ரப்புல் ஆலமீனாக (அகில உலகங்களையும் படைத்துப் பரிபாலிக்கக்கூடியவனாக) இருக்கும் இறைவனை நமக்கு அறிமுகம் செய்து வைக்கக்கூடிய அந்த மகத்துவமிக்க மார்க்கம் இஸ்லாமே ஆகும். திருக்குர்ஆனின் கடைசி அதிகாரமும் எப்படிப்பட்ட ஒரு ரப்புன் நாஸ் (மனிதர்களைப் படைத்துப் பரிபாலிக்கக்கூடியவன்) பற்றி கூறுகிறது என்றால், அவன் அனைத்து மனிதர்களின் எஜமானனும் வணக்கத்திற்குரியவனும் ஆவான். மேலும், திருக்குர்ஆனின் அந்த முதல் மற்றும் கடைசி அதிகாரத்துக்கு இடையில் என்ன தூதுச் செய்தியுள்ளதோ அது மீண்டும் மீண்டும் இந்த விஷயங்களை நினைவூட்டுகிறது:

அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படுவதுடன் சேர்த்து மனித குலத்தோடு அனுதாபமாக நடந்து கொள்ளுங்கள். வலுவிழந்தவர்கள் மற்றும் தேவை உடையவர்களுக்குப் பேருதவி புரியுங்கள். அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்களை கவனித்துக் கொள்ளுங்கள். எதுவரை என்றால், எந்த ஒரு சமுதாயத்தின் மீதான பகைமையும் உங்களை நேர்மை மற்றும் நீதியை விட்டு விலக்கிட வேண்டாம்.

ஒரு மனிதனைக் கொல்வது முழு மனித குலத்தையும் கொல்வதற்கு சமம் என்று அந்தத் திருக்குர்ஆன் கூறுகிறது. அது உறவுகளைப் பேணுமாறும், சமரசம் செய்யுமாறும் வலியுறுத்துகிறது. அது கேலி கிண்டலை வெறுக்கிறது. அது பிற மனிதர்களுக்கு எதிரில் குரலை உயர்த்துவதைக் கூட விரும்புவதில்லை. அது எவருடைய மத உணர்வுகளும் புண்படக் கூடாது என்பதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, பொய்யான கடவுள்களையும் ஏசுவதை விட்டும் தடுக்கிறது.

அது முழு உலகிலும் சமாதானம் மற்றும் சாந்தியைப் பரப்புவதற்கான கட்டளையிடுகிறது. எதுவரை என்றால், ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மத் முஸ்த.்.பா (ஸல்) அவர்களை ரஹ்மத்துல்லில் ஆலமீன் (அகில உலகங்களுக்கும் அருட்கொடை) என்று கூறுகிறது. அன்னாரால் கொண்டு வரப்பட்டுள்ள அந்த உலகளாவிய மார்க்கத்தை இஸ்லாம் என்று கூறுகிறது. எனவே, சமாதானம் மற்றும் மனிதகுலத்தின் மீதான அனுதாபம் ஆகியவற்றை உள்ளடக்கிய இதுதான் அந்த இஸ்லாம் மார்க்கமாகும். இதையே இந்தக் காலகட்டத்தில் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் மூலமாக உயிர் பெறச் செய்வது நோக்கமாக இருந்தது.

எனவே, அன்னார் (அலை) இந்த இயக்கத்துக்கு அடித்தளமிட்ட போது, தம்முடைய பைஅத் நிபந்தனை -களிலும் இந்த விஷயத்தை இவ்வாறு இணைத்து விட்டார்கள்: பைஅத் செய்யக்கூடிய ஒவ்வோர் அஹ்மதியும் அவர் அல்லாஹ்வின் பொதுவான படைப்பினங்கள் மீதான அனுதாபத்தில் அல்லாஹ்வுக்காக மட்டுமே மூழ்கியிருப்பார் என்றும், இயன்ற வரை, இறைவனால் தனக்கு வழங்கப்பட்டுள்ள ஆற்றல்கள் மற்றும் அருட்களைக் கொண்டு மனிதகுலத்துக்குப் பலன் சேர்ப்பார் என்றும் வாக்குறுதியும் ஒப்புதலும் அளிக்க வேண்டும்.

இது அஹ்மதிய்யத்தில் இணைவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறை கட்டளைக்கு இணங்க நிர்ணயித்த அந்த பைஅத் உடன்படிக்கை ஆகும். இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்ட எந்த நபர், தன்னுடனான ஆன்மிகத் தொடர்புக்கே இந்த

மக்களே! உங்கள் இறைவனும் ஒருவன் ஆவான். உங்கள் தந்தையும் (ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களும்) ஒருவர் ஆவார். எனவே, விழிப்புணர்வுடன் கேட்டுக் கொள்ளுங்கள்! எந்த அரேபியருக்கும் அரேபியர் அல்லாத எவர் மீதும், அரேபியர் அல்லாத எவருக்கும் எந்த அரேபியர் மீதும், எந்த வெள்ளையருக்கும் எந்தக் கருப்பர் மீதும், எந்தக் கருப்பருக்கும் எந்த வெள்ளையர் மீதும் எந்தச் சிறப்பும் கிடையாது. அவர்களில் எவர் ஒருவர் தனது சொந்த நன்மையின் காரணமாக முன்னேறி விடுகிறாரோ அவரே சிறந்தவர் ஆவார்.

விஷயத்தை அடிப்படையாக வைக்கிறாரோ, அப்போது இது தொடர்பாக அவருடைய சுய முன்மாதிரி எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள முடியும். இறையருளால் அப்படியே இருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் இவ்வாறு கூறி வந்தார்கள்: நான் எந்த நபருக்கும் எதிரி இல்லை. ஒவ்வொரு மனிதன் மற்றும் ஒவ்வொரு சமுதாயத்திற்கான அனுதாபத்தால் எனது உள்ளம் நிரம்பியுள்ளது. இந்த அடிப்படையில் அன்னார் தம்முடைய எஜமானரும் பின்பற்றத் தகுந்தவரும் ஆன ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்களை எப்படி உயிர்ப்பித்துக் காட்டியுள்ளார்கள் என்றால், மனிதன் வியந்து போகிறான்.

ஆக, இது மனித குலத்தின் மீது அனுதாபத்திற்கான உலகளாவிய கொடியாக இருந்தது. அது மனிதத்தின் கைகளில் இருந்து விழுந்து விட்டிருந்தது. அதை அன்னார் ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்களைப் பின்பற்றியவாறு உலகில் மீண்டும் உயர்த்திக் காட்டினார்கள். உலகம் மிகவும் வியப்புடன் ஒருமுறை மீண்டும் இந்த அறிவிப்பை செவிமடுத்தது: இவ்வாறு ஒரு பாரசீக கவிதை உள்ளது.

லிவாயேமா பனஹ் ஹர் சயீது ஃஹவாஹத் பூத்
நிதாயே ஃபத்ஹே நுமாயா(ன்) பனாமே மாபாஷத்
(துர்ரே ஸமீன் ஃபார்ஸீ பக்கம் 195)

பொருள்: நமது கொடி (மத இன பாகுபாடின்றி) ஒவ்வொரு நல்லியல்பு உள்ளவருக்கும் அடைக்கலத்துக்கான இடமாக இருக்கும். மேலும், மகத்துவமிக்க இறுதி வெற்றி நம்முடன் இணைக்கப்பட்டு விட்டது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: 'முழு மனித குலத்துடனும் அனுதாபம் காட்டுங்கள் என்பதே நம்முடைய கோட்பாடாகும். ஒருவர் ஒரு பக்கத்து வீட்டுக்கார ஹிந்துவின் வீட்டில் நெருப்புப் பிடித்து விட்டதாகப் பார்க்கிறார். ஆனால், நெருப்பை அணைப்பதில் உதவி புரிவதற்காக இவர் எழுந்து செல்லவில்லை என்றால், அவர் என்னைச் சேர்ந்தவர் இல்லை என்று நான் உண்மையாகவே கூறுகிறேன். நம்முடைய சீடர்களில் ஒருவர் ஒரு கிறிஸ்தவரை யாராவது கொலை செய்வதைப் பார்க்கிறார். இவர் அவரை விடுவிப்பதற்காக உதவி செய்யவில்லை என்றால், அவர் நம்மைச் சேர்ந்தவர் அல்ல என்று நான் உங்களுக்கு முற்றிலும் சரியாகச் சொல்கிறேன். (சிராஜே முனீர், ரூஹானி கஸாயின் தொகுதி 12, பக்கம் 28)

நாம் ஒரு கணம் நின்று, இன்றைய உலகத்தின் நிலைமைகளைப் பார்த்தால், உலகம் இந்த நல்லொழுக்கங்-களை விட்டும் எந்த அளவுக்குத் தொலைவில் சென்று விட்டது என்பது தெளிவாகத் தென்படுகிறது. இன்று நமக்கு எத்தகைய அறிவாளிகள் தென்படுகிறார்கள் என்றால், அவர்கள் மனித இரத்தத்தை சிந்த வைப்பதற்கு வினோத வினோதமான விளக்கங்களை முன்வைக்கிறார்கள். எப்படிப்பட்ட அரசியல் வழிகாட்டிகள் தென்படுகிறார்கள் எனில், அவர்கள் மனித உரிமைகளை அமுக்குவதற்குப் புதுப்புது சாக்குகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த உலகத்தின் சீர்திருத்தத்திற்காக ஒரு சீர்திருத்தவாதி வர வேண்டியது மிகவும் அவசியமாக இருந்தது.



ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அனைத்து முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், ஹிந்துக்கள் மற்றும் ஆரியர்கள் ஆகியோருக்கு இந்த விஷயத்தை வெளிபடுத்துகிறேன். உலகில் எவரும் என் எதிரி இல்லை. நான் கருணையுள்ள தாய் தம் பிள்ளைகளை நேசிப்பதைப் போன்று, இன்னும் சொல்வதாயின், அதை விட அதிகமாக மனித குலத்தை நேசிக்கிறேன். (அர்பயீன் எண் 1, ரூஹானி கஸாயின் தொகுதி 17, பக்கம் 344)

இந்தப் போதனையுடன் சேர்த்து அன்னார் சுயமே இது தொடர்பாக தமது முன்மாதிரியையும் நிலைநாட்டிக் காட்டியுள்ளார்கள். எத்தகைய முன்மாதிரி என்றால், அதை இதற்கு முன்னர் உலகம் ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மத் முஸ்த.ஃபா (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் நூல்களில் மட்டுமே படித்துள்ளது. அன்னார் தாமே இந்த நிகழ்வை எடுத்துக் கூறுகிறார்கள்: ஒருமுறை நான் வெளியில் நடைபயிற்சிக்காக சென்று கொண்டிருந்தேன். என்னுடன் ஒரு கிராமப் பதிவாளர் இருந்தார். வழியில் ஒரு வலுவிழந்த மூதாட்டி கிடைத்தார். அவர் ஒரு கடிதத்தை வாசித்துக் காட்டுமாறு அந்த கிராமப் பதிவாளரிடம் கேட்டுக் கொண்டார். ஆனால், அவர் அந்த மூதாட்டிக்கு வன்மையாக மறுத்துக் கூறி பின்னுக்குத் தள்ளிவிட்டார்.


ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அந்த வயதான பெண்மணியின் நிலையைப் பார்த்து எனதுள்ளத்தில் ஒரு காயம் போன்று ஏற்பட்டு விட்டது. நான் அந்தப் பெண்ணிடம் நின்று விட்டேன். மேலும், அந்தக் கடிதத்தைப் படித்து அவருக்கு நன்றாகப் புரிய வைத்து விட்டேன். இதனால் என்னுடன் இருந்த கிராமப் பதிவாளர் மிகவும் வெட்கத்திற்கு ஆளானார். ஏனென்றால், அவரும் நிற்க வேண்டியதாகி விட்டது. ஆனால், இறைவனின் படைப்பினத்துக்கு அனுதாபம் காட்டுவதற்கான நற்கூலியை விட்டும் இழப்பிற்குரியவராக இருந்தார். (மல்.ஃபூஸாத் தொகுதி 4, பக்கம் 82-83)

இது முற்றிலும் அதே உண்மை இஸ்லாத்தின் ஒரு முன்மாதிரியாக இருக்கவில்லையா? அது நம் எஜமானரும்

தலைவருமான ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மத் முஸ்த.்.பா (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் தென்படுகிறது. மதீனாவில் பாதி மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு பெண்மணி உம்மு ஸ.்.பர் வாழ்ந்து வந்தார். அவர் ஒருமுறை ஹுஃஸூர் (ஸல்) அவர்களிடம் வந்து, 'எனக்கு தங்களிடம் ஒரு வேலை உள்ளது. நான் தங்களிடம் தனிமையில் சிறிது பேச விரும்புகிறேன்' என்று கூறினார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த வயது முதிர்ந்த, பாதி மனநிலை பாதிக்கப்பட்ட பெண்ணின் இந்த விஷயத்தைக் கேட்டு, 'உம்மு ஸ.்.பரே! நகரத்தின் எந்த வீதியில், பாதையில் நீ விரும்பினாலும் சரி, நான் (அங்கு) உன்னுடன் அமர்ந்து பேசுவேன்' என்று கூறினார்கள். அந்தப் பெண் தனது விருப்பப்படி ஓரிடத்தில் சென்று அமர்ந்து கொண்டார். ஹுஃஸூர் (ஸல்) அவர்களும் அவருக்கருகில் அமர்ந்து கொண்டார்கள். அந்தப் பெண்ணுக்குத் திருப்தி ஏற்பட்டு விடாத வரை அங்கிருந்து எழுந்திருக்கவில்லை. (ஸுனன் இப்னுமாஜா, கிதாபுஸ் ஸஹுத், அதிகாரம் 16)

1900-ஆவது ஆண்டு ஜனவரி 5 அன்று காதியானில் ஒரு வினோதமான சம்பவம் நிகழ்ந்தது. அப்பொழுது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சாச்சா வழி சகோதரர்கள் துன்பம் கொடுப்பதற்காக மட்டுமே மஸ்ஜித் முபாரக்கின் வழியில் ஒரு சுவர் எழுப்பி விட்டார்கள். அதனால் பள்ளிக்கு வரக்கூடிய தொழுகையாளி-கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்-பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சந்திக்க வருபவர்களின் வழி அடைபட்டு விட்டது.



துவக்கத்தில் சமரசத்திற்கு முயற்சி செய்யப்பட்டது. ஆனால், மிர்ஸா இமாம் தீன் சாஹிப் மறுத்தது மட்டுமின்றி, அதையும் தாண்டி, 'வழக்கு தீர்ப்பான பிறகு அவர் ஹுஃஸூர் (அலை) அவர்களின் வீட்டுக் கதவுக்கு முன்னாலும் பெரிய சுவரை எழுப்பி ஹுஃஸூர் (அலை) அவர்களை முற்றுகை இட்டு விடுவார்' என்ற அளவுக்குக் கூறத் துவங்கி விட்டார். விவகாரம் நீதிமன்றம் வரை சென்றது. ஒரு நீண்ட காலம் வரை இந்தத் துன்பம் தரும் வழக்கு நடந்து கொண்டிருந்தது.

கடைசியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வெற்றி கிடைத்தது. இந்தச் சுவர் இடிக்கப்பட்டது மட்டுமின்றி, அதற்கும் மேற்பட்டு, நீதிமன்றம் எதிர் தரப்புக்கு எதிராக வழக்கு(க்குக்கான இழப்பீட்டுத்) தொகை, சொத்துப் பறிமுதல் ஆகியவற்றிற்கான கட்டளையும் பிறப்பித்து விட்டது. இதனால் நேற்று வரை அன்னாரை முற்றுகையிட்டு விடுவோம் என்று மிரட்டல்கள் விடுத்து வந்த அதே எதிரிகள் மிகவும் பணிவுடனும், கெஞ்சிக் கேட்டும், ஹுஃஸூர் (அலை) அவர்களின் மேலான அவைக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். 'சகோதரராக இருந்து கொண்டு இந்த சொத்துப் பறிமுதல் மூலமாக ஏன் எங்களை இழிவுபடுத்து-கிறீர்கள்?' என்ற அளவுக்குக் கூறி அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இந்த நிலைமைகள் பற்றிய தகவல் கிடைத்ததும் அன்னார், 'என் அனுமதியின்றி, ஏன் வழக்கு(க்-குக்கான இழப்பீட்டுத்) தொகைக்கு முறையிட்டீர்கள்? அதை உடனடியாக திரும்பப் பெறுங்கள்' என்று தமது வக்கீலிடம் கோபித்துக் கொண்டார்கள். மறுபுறம் அன்னார், 'தாங்கள் முழு நிம்மதியோடு இருங்கள். எந்த சொத்து பறிமுதலும் நடக்காது' என்று பதில் அனுப்பி விட்டார்கள். (சீரத்துல் மஹ்தி தொகுதி 1, அறிவிப்பு எண் 242 மற்றும் இர்.்.பானீ சாஹிப் இயற்றிய சீரத் மஸீஹ் மவ்வூத் பக்கம் 5-19)

இது, நாம் முன்னவர்களின் காலகட்டத்தில் கண்ட, எதிரிகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கான அதே முன்மாதிரி இல்லையா? பஞ்சத்தால் மரணித்துக் கொண்டிருந்த குறைஷிகளுக்கான பரிந்துரையுடன் அபூ சு.்.ப்யான் ஹுஃஸூர் (ஸல்) அவர்களின் மேலான அவையில் ஆஜரானார போது அவர், 'தாங்களோ உறவுகளைப் பேணுமாறு கட்டளையிடுகிறீர்கள். ஆனால், தங்களுடைய சமுதாயம் மரணித்துக் கொண்டிருக்கிறது. இந்த இன்னல் விலகிட அல்லாஹ்விடம் அவர்களுக்காக துஆ செய்யுங்கள்' என்று கூறினார்.

(எனவே, ஹுஃஸூர் ஸல்... அவர்-கள் பணிவுடனும், மன்றாடலுடன் நிறைந்திருந்த இந்த வேண்டுகோலை ஏற்றுக் கொண்டார்கள். மேலும்,) அவர்களுக்காக துஆ செய்தார்கள். மழை பொழிந்ததால் இந்த பஞ்சத்-தின் நிலை அகன்று போனது. (சஹீஹ் புகாரி, ஹதீஸ் எண் 1020)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வீட்டின் ஒரு பகுதியிலேயே வாழ்ந்து வந்த ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் அவர்கள் அறிவிக்கிறார்கள்: அந்த நாள்களில் பஞ்சாபில் பயங்கரமான பிளேக் நோய் பரவியிருந்தது. அதைப் பற்றி அன்னார் (அலை) அல்லாஹ்விடமிருந்து செய்தி பெற்று முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். அது அன்னாருடைய உண்மைக்கு ஒரு மதிப்பிடாக இருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் அந்தப் பிளேக் நோயின் விளைவால் மரணத்துக்கு இரையாகிக் கொண்டிருந்தார்கள். எனவே, ஒரு நாள் இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைத் தனிமையில் மிகவும் வேதனையுடனும், உருக்கத்துடனும் இவ்வாறு துஆ செய்யக் கேட்டார்கள்: இறைவா! இந்த மக்கள் ப்ளேக் நோயின் தண்டனையால் அழிந்து விட்டார்கள் என்றால், பிறகு, யார் உன்னை வணங்குவார்கள். மவ்லவி சாஹிப் கூறுகிறார்கள்: அன்னாருடைய குரலில் எந்த அளவுக்கு வலியும் கடுமையான வேதனையும் இருந்தது என்றால், கேட்பவரின் உள்ளம் உருகி விடும். (ஷே.்.ஹ் ய.்.கூப் அலீ சாஹிப் இர்.்.பானீ அவர்கள் இயற்றிய சீரத் மஸீஹ் மவ்வூத் ஷமாயிலோ அ.்.ஹ்லாக் பாகம் 3, பக்கம் 395)

(தொடரும்...)

# ஒரு கிறித்தவரின் மூன்று வினாக்களும் அவற்றிற்கான விடைகளும்

## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.




அவ்வாறே பல அறிவுள்ள ஆங்கிலேயர்கள் அண்மையில் எத்தகைய நூல்களை எழுதியுள்ளனர் என்றால், அவற்றில் அந்த ஆங்கில எழுத்தாளர்கள் ஒப்புக் கொண்டிருப்பது என்னவெனில், நாம் அரபி நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் திரும்புதல், தவக்குல் (அல்லாஹ்வின் மீது நம்பிக்கை) வைத்தல், சொந்தமாக உறுதியாக நிலைநிற்றல், முழுமையானதும், பரிசுத்தமாக்கப் -பட்டதுமான போதனை, தாக்கத்தை ஏற்படுத்துகின்ற, குழப்பத்தை உருவாக்குபவர்களுக்கு எதிரில் அதிகமாக படைப்பினத்தை சீர்திருத்துதல், வெளிப்படையான, உட்புறமான ஆதரவுகள், முற்றிலும் ஆற்றல் கொண்டிருத்தல் ஆகிய இவை அனைத்தையும் பற்றி எடுத்துக் குறிப்பிடப் -படுகின்ற இந்த மு.ஃ.ஜிஸாத்துகளை (அற்புதங்களை) தனியாக்கிப் பார்த்தாலும் கூட, அவர்களிடமிருந்து வெளிப்பட்டிருக்கின்ற இந்த எல்லா விஷயங்களும் சந்தேகமின்றி, வழக்கத்திற்கு அப்பாற்பட்டவையும், மனித ஆற்றல்களை விட உயர்வானவையும் ஆகும் என்றும், உண்மையான, சரியான நபித்துவத்தைக் கண்டறிந்து கொள்வதற்கு வலுவான, போதுமான அடையாளங்கள் இருக்கின்றன என்றும், ஒரு மனிதனுடன் இறைவன் இல்லாதவரை இந்த எல்லா விஷயத்திலும் முழுமையானவ -ராகவும், வெற்றி பெற்றவராகவும் இருக்க முடியாது என்றும், அப்படிப்பட்ட மறைவான ஆதரவுகள் அவருக்கு இருக்க முடியாது என்றும் ஒப்புக் கொள்வதை நமது நீதி நம்மை கட்டாயப்படுத்துகிறது. (அதாவது அந்த ஆங்கிலேயே எழுத்தாளர் கூறுகிறார்: நபி (ஸல்) அவர்களின் உண்மை, அற்புதம் ஆகியவற்றை ஒப்புக் கொள்வதற்கு நீதி நம்மைக் கட்டாயப்படுத்துகிறது - மொழிபெயர்ப்பாளர்).

### மூன்றாவது வினாவிற்கான விடை

எப்படிப்பட்ட சிந்தனைகளை (அப்துல்லாஹ் ஜேம்ஸ் என்ற) கிறித்தவர் தனது சொற்றொடர்களில் ஆட்சேபனையாக எடுத்து வைத்திருக்கிறாரோ, அவை உண்மையில் ஆட்சேபனைகள் அல்ல. மாறாக, அவை மூன்று தவறான புரிதல் ஆகும். அவை சிந்தனைக் குறைவின் காரணமாக அவருடைய உள்ளத்தில் உருவாகி இருக்கின்றன. முதலில், நாம் தனித்தனியாக அந்தத் தவறான புரிதல்களை நீக்குகின்றோம்.

(இறுதி நாள் பற்றி மறுப்பாளர்கள் நபியவர்களிடம் கேள்வி கேட்டபோது, ‘அது பற்றி எனக்குத் தெரியாது’ என்று வரும் வசனத்தை எடுத்து வைத்து மறுமை நாள் பற்றிய ஞானம் இல்லாதவர் இறைதூதராக இருக்க முடியுமா என்பது பாதிரியின் முதல் ஆட்சேபனை ஆகும். இதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கீழ்வருமாறு விடையளித்திருக்கிறார்கள் - மொழிபெயர்ப்பாளர்.)

முதலாவது தவறான புரிதல் தொடர்பான விடை என்னவெனில், உண்மை நபிக்கும், அவர் இறைவனைப் போன்று ஒவ்வொரு மறைவான விஷயத்தையும் தனித்தன்மையுடன் தெரிந்திருக்க வேண்டும் என்பது ஒருபோதும் அடையாளம் அல்ல; மாறாக, தனது சொந்த ஆற்றல் மற்றும் தனது சொந்த சிறப்புத்தன்மையினால் மறைவானவற்றை அறிபவனாக இருப்பது இறைவனுக்கே உரித்தான சிறப்புப் பண்பாகும். என்றென்றும் நிலைத்திருக்கக் கூடிய இறைவனே மறைவானவற்றை அறிந்தவன். மற்றவை அனைத்தும் மறைவானவற்றின் அறிவிலிருந்தும் விலக்கப்பட்டவை என்ற கொள்கையைத் தொன்றுதொட்டே உண்மையாளர்கள் கொண்டிருக்கின்றனர். அதாவது இறைவன் மறைவானவற்றை அறிந்தவனாக இருக்க வேண்டும் என்றும், இந்தப் பண்பு அவனது இருப்பிற்கான தனித்தன்மை வாய்ந்த சிறப்பு உரிமை என்றும் அவர்கள் நம்பினர். எனவே (மறைவானவற்றை அறிதல் என்ற) இந்தப் பண்பையும், இதை ஒத்த மற்ற பண்புகளையும் இறைவனுடன் பங்கிட்டுக் கொள்வதற்கு வேறு எவருக்கும் உரிமை இல்லை. ஏனெனில், உயிர் உள்ளவர் அனைவரும், தாம் ஒன்றும் இல்லாமல் ஆகி விடுதல் மற்றும் உயிரற்றவையாக ஆகி விடுதல் ஆகிய

நிலைகளைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது. இறையிருப்பில் அவனுக்கு இணையாக வேறு எவரும் இருக்க முடியாததைப் போன்று, அவனது பண்புகளை ஒத்தவராக இருப்பதற்கும் அதே தடைதான் இருக்கிறது.

எனவே (இறைவனைத் தவிர) மற்ற அனைவரும் மறைவானவற்றிலிருந்து அறிவைப் பெற்றிருப்பதிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளனர். அவர், நபியாக இருந்தாலும் அல்லது இறைவனுடன் உரையாடுபவராக இருந்தாலும் அல்லது இறை நேசராக இருந்தாலும் சரியே! ஆயினும் இல்ஹாம் மூலமாக மறைவான இரகசியங்களை அறிவது என்பது எப்போதும் சிறப்பான, தேர்ந்தெடுக்கப்பட்டவருக்குக் கிடைத்துக் கொண்டிருந்திருக்கிறது; இப்போதும் கிடைக்கின்றது. அதை நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர்களிடம் மட்டுமே காண்கின்றோம். வேறு யாரிடமும் காணவில்லை. அல்லாஹ் அவ்வப்போது



தனது சிறப்பான அடியார்களுக்குத் தனது சில குறிப்பிட்ட இரகசியங்களைத் தெரிவித்து விடுகிறான் என்பதே அவனுடைய வழக்கமாக இருந்து வருகிறது. நியமிக்கப்பட்ட நேரங்களிலும், விதிக்கப்பட்ட நேரங்களிலும் மறைவான -வற்றைப் பற்றிய அருளின் துளி அவர்களின் மீது விழுகிறது. இன்னும் கூறுவதென்றால், அல்லாஹ்வின் முழுமையான நெருக்கத்தைப் பெற்றவர்கள் அதன் மூலமாகவே சோதிக்கப்படுகின்றனர். அடையாளம் காணப்படவும் செய்கின்றனர். சில நேரங்களில் வருங்காலத்தின் மறைவான விஷயங்கள் அல்லது சில மறைவான இரகசியங்கள் அவர்களுக்கு கூறப்படுகின்றன. ஆனால் அது அவர்களின் அதிகாரத்தினாலும், எண்ணத்தினாலும், ஆற்றலினாலும் அல்ல. மாறாக, இறைவனின் எண்ணம், அதிகாரம், ஆற்றல் ஆகியவற்றால் இந்த எல்லா அருள்களும் அவர்களுக்குக் கிடைக்கின்றன.

அவனுடைய விருப்பத்தின்படி நடக்கின்றவர்கள், அவனுக்காகவே ஆகி விடுகின்றனர். மேலும் அவனுக்காகவே மாய்த்துக் கொள்கின்றனர். முற்றிலும் நன்மையாகத் திகழ்கின்ற அவனுடன் அவர்களுக்கு எப்படிப்பட்ட பழக்கம் இருக்கிறதென்றால், அவன் அவர்களின் பெரும்பாலானவற்றை கேட்கின்றான். தனது சென்ற கால செயல் அல்லது வருங்கால விருப்பத்தை சில நேரங்களில் அவர்களுக்கு வெளிப்படுத்தி விடுகின்றான். ஆனால் இறைவன் தகவல் அறிவிக்காமல் அவர்கள் எதையும் அறிவதில்லை. அவர்கள் இறைவனின் நெருக்கத்தைப் பெற்றவர்களாக இருக்கின்றார்கள்தான். ஆயினும் அவர்கள் இறைவனாக இருப்பதில்லையே! (இறைவன்) புரிய வைப்பதனால் அவர்கள் புரிகின்றனர். (இறைவனால்) கூறப்படுவதால் அவர்கள் அறிகின்றனர் (இறைவனால்) காட்டப்படுவதால் அவர்கள் காண்கின்றனர். (இறைவனால்) பேச வைக்கப்படுவதால் அவர்கள் பேசுகின்றனர். அவர்கள், தாம் எதையும் சொந்தமாகக் கொண்டிருப்பதில்லை. மகத்தான ஆற்றல் அவர்களைத் தனது இல்ஹாமின் தூண்டுதலால் பேச வைக்கும்போது அவர்கள் பேசுகிறார்கள். மேலும் காட்டும்போது காண்கிறார்கள். கேட்க வைக்கும்போது கேட்கிறார்கள். இறைவன் அவர்களுக்கு எந்த மறைவான விஷயத்தையும் வெளிப்படுத்தாத வரை அவர்களுக்கு அந்த விஷயம் பற்றி எதுவும் தெரிவதில்லை. இதற்கான சாட்சி எல்லா நபிமார்களின் வாழ்க்கையிலும் காணப்படுகிறது. ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்கள் எந்த அளவுக்கு தமது அறியாமையை தாமே ஒப்புக் கொள்கிறார்கள் பாருங்கள்! ‘அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான். பரலோகத்திலிருக்கிற தூதர்களும் அறியார்.’ (மாற்கு 13:32 காண்க). பிறகு (இயேசு அவர்கள்) கூறுகின்றார்கள்: நான் சுயமாக எதையும் அறிவதில்லை. (அதாவது எதையும் செய்ய முடியாது). ஆனால் எனது பிதா கற்றுக் கொடுத்த விஷயங்களைக் கூறுகிறேன். எவரையாவது நேர்வழியைப் பெற்றவர்களின் அந்தஸ்து வரை கொண்டு செல்வது எனது அதிகாரத்திற்குட்பட்டதல்ல. இயேசு இவ்வாறு கூறினார்: ‘நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே.’ (மாற்கு 10:18) மத்தேயு 19:17, லூக்கா 18:19 ஆகிய வசனங்களிலும் இதே கருத்து காணப்படுகிறது - மொழிபெயர்ப்பாளர்.

சுருக்கமாக, எந்த நபியும் அதிகாரம் படைத்தவர் என்றோ அல்லது மறைவானவற்றை அறிபவர் என்றோ வாதம் செய்யவில்லை. மஸீஹ் என்று அழைக்கப்படுகின்ற இந்த இயலாத அடியாரைப் பாருங்கள். படைக்கப்பட்ட ஒருவரை எந்த அறிவற்ற மக்கள் இறைவன் எனக் கருதி இருக்கின்றனரோ, அவர் எல்லா இடத்திலும் தனது சொல்லினாலும், செயலினாலும் நான் ஒரு பலவீனமான, ஆற்றல் இல்லாத அடியாராக இருக்கின்றேன். மேலும் எனக்கு சொந்தமாக எந்த சிறப்பும் இல்லை என்று வெளிப்படுத்தி விட்டார். மேலும் அவருக்கு முடிவு ஏற்பட்டபோது அவருடைய ஒப்புதல் எத்தகைய அருமையான சொற்களில் இருக்கிறது!

சுவிசேஷத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இயேசு (தான் பிடிக்கப்படுவேன் என்ற செய்தியைப் பெற்று) பதற்றமடையத் தொடங்கினார்; மிகவும் துக்கமடைந்தார். மேலும் அவர் (தனது சீடர்களாகிய) அவர்களிடம், எனது உயிரைப் பற்றிய கவலை மரணத்தைப் போன்று இருக்கிறது என்று கூறினார். மேலும் கொஞ்சம் முன்னர் சென்று தரையில் விழுந்தார். (அதாவது கர்த்தருக்கு சிரம் பணிந்தார்). மேலும் இந்த நேரம் என்னிடமிருந்து நீங்கட்டுமாக என்று வேண்டினார். என் பிதாவே! இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படிச் செய்யும் என்று வேண்டினார்.

(மத்தேயு 26:38-39 மாற்கு 14:36 லூக்கா 22:42 ஆகியவை காண்க - மொழிபெயர்ப்பாளர்). அதாவது பிதாவே! உம்மாலே எல்லாம் கூடும். இந்தப் பாத்திரத்தை என்னிடமிருந்து அகற்றுவாயாக என்றார். அதாவது நீ எல்லா ஆற்றல்களையும் கொண்டவன் ஆவாய். நான் பலவீனமான, இயலாத அடியான் ஆவேன். நீ நீக்கினால் இந்த சோதனை நீங்கலாம் என்றார். மேலும் கடைசியில், 'ஏலீ ஏலீ லாமா சபக்தானீ' என்று கூறியவாறு உயிரை விட்டார். அதன் பொருள்: என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்பதாகும். (மத்தேயு 27:46 காண்க).



இப்போது பாருங்கள். துஆ ஒப்புக் கொள்ளப்படவில்லைதான். ஏனெனில் அது நீங்காத இறைநியதியாக இருந்தது. ஒரு பலவீனமான படைப்பினம் (ஆகிய இயேசு) படைப்பாளனின் உறுதியான எண்ணத்திற்கு முன்னால் என்ன வெற்றி பெற முடியும்? ஆனால் ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்கள் ஒருவேளை (தமது துஆ) ஒப்புக் கொள்ளப்பட்டு விடலாம் என்ற நம்பிக்கை -யால் தமது இயலாமையையும், அடிமைத்துவத்தையும் மிக உச்சகட்ட எல்லையை எட்ட வைத்து விட்டார்கள். துஆ மறுக்கப்படும்; ஒருபோதும் ஒப்புக் கொள்ளப்படாது என்பது அவருக்குத் முன்னரே தெரிந்திருந்தால், இரவு முழுக்க விடியும் வரை தம்மைக் காப்பாற்றுவதற்காக தொடர்ச்சியாக ஏன் துஆ செய்து வந்தார்கள்? தமக்கும் தமது சீடர்களுக்கும் கிடைக்க இயலாத இந்த கடும் முயற்சியை செய்வதற்கு ஏன் அவர்கள் வலியுறுத்திக் கூறி வந்தார்கள்?

எனவே (ஹஸ்ரத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது (பாதிரி ஜேம்ஸ் என்ற) ஆட்சேபனை செய்பவரின் கூற்றுக்கேற்ப, முடிவு இறைவனுக்குத் தெரியும்; தமக்குத் தெரியாது என்பதே (இயேசு ஆகிய) அவர்களின் உள்ளத்தில் இருந்தது. பிறகு ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்களின் சில முன்னறிவிப்புகள் சரியாக நிறைவேறா -திருப்பதற்குக் காரணம், ஞானம் இல்லாததன் காரணத்தால், மறைவான இரகசியங்களை சுயமாகப் புரிவதில் (இயேசுவாகிய) அவருக்கு தவறு ஏற்பட்டு வந்தது என்பதே ஆகும். எடுத்துக்காட்டாக, இயேசு இவ்வாறு கூறினார்: மறுஜென்ம காலத்திலே மனுஷ குமாரன் தம்முடைய மகிமையுள்ள சிம்மாசனத்தின் மேல் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிம்மாசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (மத்தேயு 19:28 காண்க)

ஆனால் (இயேசுவின் சீடர்) யூதாஸ் ஸ்கரியோத்து என்பவர் இந்த சிம்மாசனத்தை இழந்து விட்டார். அவரது காதுகள் சிம்மாசனத்தில் அமரும் செய்தியைக் கேட்டன. ஆனால் சிம்மாசனத்தில் அமரும் பாக்கியம் அவருக்குக் கிடைக்கவில்லை என்று அந்த சுவிசேஷங்களிலிருந்தே வெளிப்படையாகிறது. (யோவான் 7:64,71 காண்க மொழிபெயர்ப்பாளர்). இப்போது நேரிய முறையிலும், உண்மையான முறையிலும் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் (தம்மைக் காட்டிக் கொடுத்த தமது சீடர் யூதாஸ் என்ற) அந்த நபர் மார்க்கத்தை விட்டு விடுவார் மற்றும் தீய முடிவை அடைவார் என்பது பற்றி முன்பே அறிந்திருந்தால், சிம்மாசனத்தில் அமரும் பாக்கியம் என்ற அந்த பொய்யான செய்தியை (இயேசு) ஏன் தெரிவித்தார் என்ற கேள்வி எழுகிறது. அவ்வாறே அவர் ஒரு அத்தி மரத்தை தூரத்திலே பார்த்து, அதில் அத்திப்பழம் கிடைக்குமா என்று பார்க்க வந்தார். அத்திப் பழக்காலமாய் இராதபடியால், அவர் அதனிடத்தில் வந்தபோது, அதில் இலைகளையல்லாமல், வேறொன்றையும் காணவில்லை. அப்பொழுது இயேசு அதைப் பார்த்து, இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக் கடவன் என்றார். (மாற்கு 11:13,14 காண்க மொழிபெயர்ப்பாளர்). ஆனால் அதன் தீய விளைவு அத்தி மரத்திற்கு ஏதும் ஏற்படவில்லை. அவருக்கு மறைவானதைப் பற்றிய ஞானம் ஏதாவது இருந்திருந்தால், கனியில்லாத மரத்தின் பக்கம் அதன் கனியை உண்ணும் எண்ணத்தில் ஏன் சென்றார்?

அவ்வாறே ஒருமுறை அவர்களின் ஆடையை ஒரு பெண் தொட்டாள். அப்போது அவர் நாலாப்புறமும் பார்த்து என்னைத் தொட்டது யார்? என்று கேட்டார். (மாற்கு 5:30 காண்க - மொழிபெயர்ப்பாளர்). அவருக்கு மறைவான விஷயத்தைப் பற்றி ஏதாவது ஞானத்தின் பங்கு இருந்திருந்தால், தொடும் பெண்ணைப் பற்றி அறிவது பெரிய விஷயம் ஒன்றும் இல்லை. (மஸீஹ் மீண்டும் உலகில் வருவதும், நட்சத்திரங்கள் விழுவதும் ஆகிய) இவை அனைத்தும் நடக்காத வரை இந்த காலத்தின் மக்கள் சென்று விட மாட்டார்கள் என்று ஒருமுறை அவர் முன்னறிவித்திருந்தார். ஆனால் அந்தக் காலத்தில் வானத்தின் எந்த நட்சத்திரமும் பூமியில் விழவுமில்லை. ஹஸ்ரத் மஸீஹ் நீதி செலுத்துவதற்காக உலகிற்கு வரவுமில்லை. அந்த நூற்றாண்டு என்ன? அதற்கு இன்னும் 18 நூற்றாண்டுகள் கடந்து விட்டன. தற்போது 19-ஆவது நூற்றாண்டுகள் கடந்து செல்ல இருக்கின்றன. எனவே ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்களுக்கு மறைவான விஷயங்கள் தெரியவில்லை என்பதற்கு இந்த சில சாட்சிகளே போதுமானவையாகும். அவை வேறு எந்த நூலிலிருந்தும் அல்ல. மாறாக, நான்கு சுவிசேஷசங்களைப் பார்த்து நாம் எழுதியிருக்கிறோம். இஸ்ராயீலின் மற்ற நபிமார்களின் நிலையும் இதுவேயாகும். ஹஸ்ரத் யஃகூப் (அலை) அவர்கள் நபியாகத்தான் இருந்தார்கள். ஆனால் அந்த கிராமத்தின் காடுகளில் தம் மகனுக்கு என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பது பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாதிருந்தது. நெபுகத் நெஸரின் ஆன்மிகக் கனவின் விளக்கத்தை ஹஸ்ரத் தானியேல் அவர்களுக்குக் கொடுக்காதவரை கனவு என்ன? அதன்

விளக்கம் என்ன என்பது பற்றி எதுவும் தெரியாதிருந்தது.★ (தானியேல் 2:28 காண்க - மொழிபெயர்ப்பாளர்).

எனவே இந்த எல்லா ஆய்வுகளிலிருந்தும் தெரிய வருவது என்னவென்றால், இந்த விஷயம் இறைவனுக்குத் தெரியும் எனக்குத் தெரியாது என்று நபி கூறுவது முற்றிலும் உண்மையும் தனது இடத்தில் பொருத்தமானதும், முழுக்க முழுக்க அந்த நபியின் சிறப்புத்தன்மையும், அவருடைய عُبُوْدِيَّتُ (உபூதிய்யத் - இறைவனுக்கு அடிமையாக இருக்கும் தன்மை) என்பதற்கு பெருமைக்குரியதுமாகும். இன்னும் கூறுவதென்றால், இந்த விஷயங்களால் (நபியாகிய) அவருடைய மகத்துவம் தம் கண்ணியத்திற்குரிய எஜமான(ன் ஆகிய இறைவ)னுக்கு முன்னால் அதிகமாகிறதே தவிர அவருடைய நுபுவ்வத்தின் அந்தஸ்துக்கு கொஞ்சமும் குறைவு ஏற்படுவதில்லை. எனினும் இறைவனிடமிருந்து கிடைக்கும் தகவல்களினால் மறைவான இரகசியங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவுக்குக் கிடைத்திருக்கின்றன என்ற ஆய்வு செய்வது நோக்கமாக இருந்தால், அதற்கான ஒரு மிகப் பெரிய சான்றை எடுத்து வைக்க நான் ஆயத்தமாக இருக்கிறேன். எந்த அளவுக்கு தவ்ராத்திலும், இஞ்சீலிலும், முழு பைபிளிலும் நபிமார்களின் முன்னறிவிப்புகள் எழுதப்பட்டிருக்கின்றனவோ அவற்றின் வீரியத்திலும், நிலைப்பாட்டிலும் ஆயிரக்கணக்கான பங்கை விட அதிகமானவையாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகள் இருக்கின்றன. அதன் விபரம் மிகவும் ஆய்வினால் எழுதப்பட்ட நபியின் ஹதீஸ்களின் மூலமாக சுருக்கமான முறையில் தெரிய வருகிறது. ஆனால் போதுமான, திருப்திகரமான, மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய கூற்று திருக்குர்ஆனில் காணப்படுகிறது. பிறகு, மற்ற மதங்களைச் சேர்ந்தவர்களைப் போன்று முஸ்லிம்களிடம் வெறும் கதைகள் மட்டுமே அல்ல. மாறாக, இந்த எல்லா அருள்களும் இஸ்லாத்தில் எப்போதும் இருக்கின்றன என்று அவர்கள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் மாற்று சமுதாயத்தினரிடம் கூறிக் கொண்டிருக்கின்றனர்; இப்போதும் கூறுகின்றனர். சகோதரர்களே! வாருங்கள். முதலில் சோதித்துப் பாருங்கள். பிறகு ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனால் அந்தக் குரல்களை யாரும் கேட்பதில்லை. அல்லாஹ்வின் சான்று அவர்களுக்கு நிறைவடைந்து விட்டது. நாங்கள் அழைக்கின்றோம்; அவர்கள் வருவதில்லை. நாங்கள் காட்டுகின்றோம்; அவர்கள் பார்ப்பதில்லை. அவர்கள் கேட்க வேண்டாம்; பார்க்க வேண்டாம்; நேர்வழி பெற வேண்டாம் என்பதற்காக அவர்கள் கண்களையும் காதுகளையும் முற்றிலும் நம்மிடமிருந்து திருப்பி விடுகின்றனர்.

(பாதிரி ஜேம்ஸ் என்ற அந்த) ஆட்சேபனை செய்பவர் எடுத்து வைத்திருக்கும் இரண்டாவது தவறான புரிதல், குகைவாசிகளின் எண்ணிக்கையைப் பற்றி திருக்குர்ஆனில் தவறாகக் கூறப்பட்டுள்ளது என்பதாகும். இது (அவரது) வெறும் வாதம் மட்டுமே ஆகும். அவருடைய சான்றுகள் பற்றி சிந்திப்பதற்கும், தெளிவான பதில் கொடுப்பதற்கும், 'அது ஏன் தவறு? அதற்கு நேர்மாற்றமாக சரியான கூற்று என்ன? அது சரியானவை என்பதற்கு என்ன சான்றுகள்' ஆகியவை பற்றி ஆட்சேபனை செய்பவர் எதுவும் எழுதவில்லை. ஆட்சேபனை செய்பவருக்கு திருக்குர்ஆனின் கூற்றில் ஏதாவது ஆட்சேபனை இருந்தால், அதற்கான காரணங்களை எடுத்து வைத்திருக்க வேண்டும். காரணங்களை எடுத்து வைக்காமல் வெறுமனே தவறானது என்று குறிப்பிடுவது உண்மையைத் தேடுபவர்களின் வேலையல்ல.

ஆட்சேபனை செய்பவருடைய உள்ளத்தில் உருவான மூன்றாவது தவறான புரிதல் என்பது, (ஒரு மன்னருடைய சுற்றுப் பயணத்தைப் பற்றி திருக்குர்ஆனில் வருகின்றது). அவர் சென்று சென்று எத்தகைய இடம் வரை சென்று விட்டார் என்றால், அங்கு அவருக்கு சூரியன் சதுப்பு நிலத்தில் மறைவதாகத் தென்பட்டது என்று திருக்குர்ஆனில் எழுதப்பட்டுள்ளது. இப்போது (பாதிரி ஜேம்ஸ் என்ற) கிறித்தவர் உவமையிலிருந்து உண்மை நிலையின் பக்கம் முகம் திருப்பி, சூரியன் இவ்வளவு பெரியதாக இருக்கும் நிலையில், ஒரு சிறிய சதுப்பு நிலத்தில் எவ்வாறு மறைந்து விட்டது என்று ஆட்சேபனை செய்கிறார். இது எப்படிப்பட்டதென்றால், வேதாகமத்தில் இயேசுவை 'தேவ ஆட்டுக் குட்டி' என்று கூறப்பட்டிருக்கிறது. (யோவான் 1:29,36 காண்க - மொழிபெயர்ப்பாளர்). இது எவ்வாறு இருக்க முடியும்? ஆடு என்றால் அதன் தலை மீது கொம்பு இருக்க வேண்டும். உடலின் மீது முடியும் இருக்க வேண்டும். மேலும் கால்நடைகளைப் போன்று நிலங்களில் நடக்க வேண்டும். ஆடுகள் தின்னுகின்ற தீனிகளைத் தின்ன வேண்டுமல்லவா என்று ஒருவர் கேட்பது போன்றதாகும். சகோதரரே! சூரியன் உண்மையிலேயே சதுப்பு நிலத்தில் மறைந்ததாக திருக்குர்ஆன் வாதம் செய்திருக்கிறது என்று நீங்கள் யாரிடமிருந்து கேள்விப்பட்டீர்கள்? திருக்குர்ஆன் அந்த மனிதனுடைய சிந்தனைக்கேற்ப அவரது பார்வையில் சூரியன் சதுப்பு நிலத்தில் மறைந்ததாக அவருக்குத் தென்பட்டது என்று மட்டுமே கூறியிருக்கிறது.

ஆகவே இது ஒரு மனிதரின் பார்வையின் நிலையைப் பற்றி எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. எந்த இடத்தில் சூரியன் ஏதாவது ஒரு மலைக்கு அல்லது மக்கள் வாழுமிடத்திற்கு

எந்த அளவுக்கு தவ்ராத்திலும், இஞ்சீலிலும், முழு பைபிளிலும் நபிமார்களின் முன்னறிவிப்புகள் எழுதப்பட்டிருக்கின்றனவோ அவற்றின் வீரியத்திலும், நிலைப்பாட்டிலும் ஆயிரக்கணக்கான பங்கை விட அதிகமானவையாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகள் இருக்கின்றன.

★பைபிள் வசனம் இவ்வாறு வருகிறது: 'மறைபொருளை வெளிப்படுத்துகிற பரலோகத்திலிருக்கிற தேவன் கடைசி நாளில் சம்பவிப்பதை ராஜாவாகிய நெபுகாத்நேச்சாருக்குத் தெரிவித்திருக்கிறார். உம்முடைய சொப்பனமும் உமது படுக்கையின் மேல் உம்முடைய தலையில் உண்டான தரிசனங்களும் என்னவென்றால், ராஜாவே! உம்முடைய படுக்கையின் மேல் நீர் படுத்திருக்கையில், இனிமேல் சம்பவிக்கிறதென்ன என்கிற நினைவுகள் உமக்குள் உழும்பிற்று; அப்பொழுது மறைபொருளை வெளிப்படுத்துகிறவர் சம்பவிக்கப்போகிறதை உமக்குத் தெரிவித்தார்.' (தானியேல் 2:28,29)

அல்லது மரங்களுக்குப் பின்னால் மறைந்ததாகத் தென்படுகிறதோ அப்படிப்பட்ட ஓர் இடத்தை அவர் அடைந்தார். பொதுவாக இவ்வாறு தென்படுவது வழக்கமாகும். இன்னும் கூறுவதென்றால், சதுப்பு நிலத்தில் மறைவது போன்று தென்பட்டது. இதன் கருத்து, அந்த இடத்தில் எந்த வாழுமிடமோ அல்லது மரமோ அருகில் இல்லாதிருந்தது. மாறாக, பார்வை செல்லும் வரை அந்த பொருள்களில் எந்த பொருளின் அடையாளமும் தென்படவில்லை. வெறும் ஒரு சதுப்பு நிலம் இருந்தது. அதில் சூரியன் மறைவதாகத் தென்பட்டது என்பதேயாகும்.

இதன் முன்னுள்ள பின்னுள்ள வசனங்களைப் பாருங்கள். இந்த இடத்தில் அறிவுப்பூர்வமான ஆய்வு பற்றிய குறிப்பு ஏதும் இருக்கிறதா? ஒரு நபரின் வெகு தொலைவிலான பயணம் பற்றிய குறிப்பு மட்டுமே இருக்கிறது. மேலும் இந்த விஷயங்களை எடுத்துரைப்பதால், மக்கள் வாழாத அத்தகைய இடம் வரை அவர் சென்றடைந்தார் என்ற அளவிலான கருத்துக்கு சான்று அளிப்பதே நோக்கமாகும். எனவே இந்த இடத்தில் விண்ணியல் பற்றிய விவகாரத்தைக் கொண்டு வந்து தூக்கிப் பிடித்துக் கொண்டிருப்பது முற்றிலும் பொருத்தமற்றது என்பதைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்? எடுத்துக்காட்டாக, இன்று இரவு மேகத்தால் வானம் முற்றிலும் சுத்தமாகி விட்டது. மேலும் நட்சத்திரங்கள் வானத்தின் புள்ளிகளைப் போன்று ஒளிமிக்கவாறு காணப்பட்டன என்று ஒருவர் கூறினால், நட்சத்திரங்கள் புள்ளிகளைப் போன்ற அளவில்தான் இருக்கின்றனவா என்றும், விண்ணியல் நூல்களை எடுத்து திறந்து வைத்துக் கொண்டு ஒருவர் விவாதிக்கத் தொடங்கினால், சந்தேகமின்றி, இந்தச் செயல் அறிவற்றவர்களின் செயலாக இருக்கும். ஏனெனில் அந்த நேரத்தில் பேசுபவரின் எண்ணத்தில் உண்மையிலேயே நடந்த விஷயத்தைக் கூறுவது நோக்கமல்ல. எல்லா உலகமும் கூறுவது போன்று, அவர் உவமையாகக் கூறிக் கொண்டிருக்கிறார் என்பது மட்டுமே ஆகும். இறைவனின் இரவு உணவுத் தட்டில் மஸீஹின் இரத்தத்தைக் குடிப்பவர்களே! இறைச்சியைத் தின்பவர்களே! இப்போது வரை உங்களுக்கு உவமைகள், உருவகங்கள் பற்றி எதுவும் தெரியாதா?★

அதாவது இதில் இயேசு அப்பத்தைத் தமது உடலாகவும், பானத்தை தமது இரத்தமாகவும் உவமையாகக் குறிப்பிட்டிருக்கிறார். இந்த உவமைகளையெல்லாம் புரியத்தெரிந்த கிறித்தவர்களுக்கு இஸ்லாம் கூறும் உவமையைப் புரியத் தெரியவில்லையா என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கேட்கிறார்கள் - மொழிபெயர்ப்பாளர்).

★இதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பைபிளில் உள்ள இயேசு உவமையாகக் குறிப்பிட்ட கூற்றைக் எடுத்துரைக்கிறார்கள். அதில் இவ்வாறு வருகிறது: ‘அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள் இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள் இது பாவமன்னிப்புண்டாகும்படி, அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்றார்.’ (மத்தேயு 26:26-28 காண்க மொழிபெயர்ப்பாளர்).



எல்லா நாடுகளிலும் பேச்சு வழக்கில் உவமைகள், உருவகங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தும் விசாலமான கதவு திறந்துள்ளது என்பதை அனைவரும் அறிவார்கள். மேலும் பொதுமக்கள் எளிமையாக தமது அன்றாடம் பேசும் பேச்சில் மேற்கொள்கின்ற அதே உவமைகளையும், உருவகங்-களையும்தான் இறைவனின் வஹீ மேற்கொள்கின்றது. எல்லா இடத்திலும், எல்லாத் தருணத்திலும் தத்துவ ஞானத்தின் நுட்பமான உவமைகளைப் பின்பற்றுவது வஹீயின் முறை அல்ல. ஏனெனில் பேசும் விதம் பொதுமக்களை நோக்கி இருக்கிறது. எனவே அவர்களின் புரிதலுக்கேற்பவும், அவர்களின் சொல் வழக்கங்களுக்கு ஏற்பவும் பேசுவது அவசியமாகும். உண்மைகளையும், நுட்பமான ஞானங்களையும் அவற்றுக்கான இடத்தில் கூறுவது பொருத்தமானதாகும். ஆயினும் பொதுமக்களிடம் அவர்களின் மொழி நடையில் பேசுவது கடமையாக இருக்கக் கூடிய அப்படிப்பட்ட மனிதருக்கு (அதாவது நபிக்கு) சொல் வழக்குகளை விட்டு விடுவதும், வழக்கமான உவமைகளை-யும், உருவகங்களையும் விட்டு ஒரேயடியாக விலகி விடுவதும் ஒருபோதும் பொருத்தமானதல்ல. அப்போதுதான் அவர்கள் அவருடைய பேச்சைப் புரிய முடியும் அவர்களின் உள்ளத்தில் அதன் தாக்கம் ஏற்பட முடியும்.

எனவே உருவகங்கள், உவமைகள் ஆகியவற்றில் இருந்து தவிர்க்கப்பட்ட அல்லது தவிர்ப்பதை ஆகுமானதாகக் கொண்டிருக்கின்ற எந்த இல்ஹாமிய மறைநூலும் இல்லை என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயமாகும். இறைவனின் எந்த சொல்லாவது உலகில் அப்படியும் வந்திருக்கிறதா என்ன? நாம் சிந்தித்தால், நாம் ஒவ்வொரு நாளும் நமது பேச்சில் நூற்றுக்கணக்கான உவமைகளை, உருவகங்களை பேசி விடுகின்றோம். எவரும் அதை ஆட்சேபனை செய்வதில்லை. எடுத்துக்காட்டாக, பிறை, முடியைப் போன்று நுண்ணியதாக இருக்கிறது. நட்சத்திரங்கள் புள்ளிகளைப் போன்று இருக்கின்றன அல்லது நிலா மேகத்திற்குள் மறைந்து விட்டது. சூரியன் இப்போது காலையில் உதித்திருக்கிறது. ஈட்டியளவுக்கு மேலே வந்திருக்கிறது. நாங்கள் ஒரு பிளேட் (தட்டு) பிரியாணி சாப்பிட்டோம்; ஒரு கிளாஸ் குளிர்பானம் குடித்தோம் என்று கூறப்படுகிறது.

இந்த எல்லா விஷயங்களினாலும், பிறை, முடியைப் போன்று எவ்வாறு நுண்ணியதாக முடியும்? நட்சத்திரங்கள் எவ்வாறு புள்ளிகள் அளவுக்கு ஆக முடியும்? அல்லது நிலா மேகத்திற்குள் எவ்வாறு அடங்க முடியும்? ஒரு நாளில் ஆயிரக்கணக்கான மைல்களைக் கடந்து விடுகின்ற அளவுக்கு சூரியன் விரைவாக இயங்கியும் ஒரு பகலில் ஈட்டி அளவுக்கு மட்டும்தான் அது கடந்து விடுகிறதா என்ன என்ற உறுத்தல் எவருடைய உள்ளத்திலும் ஏற்படத் துவங்குவதில்லை. ஒரு தட்டு பிரியாணி சாப்பிட்டேன் அல்லது ஒரு கிளாஸ் குளிர்பானம் குடித்தேன் என்று கூறுவதால் தட்டையும் கிளாசையும் துண்டு துண்டாக்கி சாப்பிட்டிருப்பார் என்று எவரும் கருத முடியாது. மாறாக, அதில் இருந்த உணவு, தண்ணீரை சாப்பிட்டிருப்பார் என்றே கருதுவார்கள். மிகவும் தெளிவான விஷயத்தில் ஆட்சேபனை செய்வதை நீதியை விரும்பும் எந்த எதிரியும் விரும்புவதில்லை. எங்களில் அறியாதவர்கள் அல்லது கடுமையான காழ்ப்புணர்ச்சி கொண்ட மக்கள் (பைபிளில் வருகின்ற உவமையான விஷயங்களில்) அப்படிப்பட்ட ஆட்சேபனையை செய்கின்றனர் என்பதை நீதியை விரும்பும் கிறித்தவர்களிடமிருந்து நாமே கேள்விப்பட்டிருக்கிறோம்.

இறைவனுடைய சொற்களில் உவமையாக அல்லது உருவகமாக ஏதாவது வந்தால் அந்தக் கூற்றை உண்மையாகப் பொருத்தி ஆட்சேபனைக்குரியதாக்கினால் அது உண்மையை விரும்பக் கூடிய செயலா என்ன? இந்நிலையில் எந்த இல்ஹாமிய நூலும் ஆட்சேபனையில் இருந்து தப்பிக்க முடியாது. கப்பலில் உட்காருபவர்கள் அல்லது நீராவிக் கப்பலில் செல்பவர்கள் சூரியன் தண்ணீரிலிருந்தே உதிக்கின்ற, தண்ணீரிலேயே மறைகின்ற காட்சியை நாள்தோறும் பார்க்கின்றனர். அவர்கள் பார்ப்பதைப் போன்றே, அது வெளிப்பட்டது. அது மறைந்தது என்றும் நூற்றுக்கணக்கான முறை ஒருவருக்கொருவர் கூறுகின்றனர். இந்தப் பேச்சு வழக்கின் நேரத்தில் வானவியல் கல்வியின் பதிவேட்டைத் திறப்பதும், சூரிய அமைப்பின் விவகாரத்தை எடுத்துக் கொண்டு உட்காருவதும் எப்படிப்பட்ட செயல் என்றால், அப்படிப்பட்டவரை நோக்கி, பைத்தியக்காரனே! இந்த அறிவு உனக்கு மட்டும்தான் தெரியுமா? எங்களுக்குத் தெரியாதா என்ற விடையை (ஆட்சேபனை செய்பவர்) செவிமடுப்பது போன்றதாகும் என்பது வெளிப்படை.

(அதாவது சூரியன் மறைந்தது என்று பொதுவான பேச்சு வழக்கில் ஒருவர் கூறுவதை வைத்து, வானவியலின் அடிப்படையில் அதற்கு மறுப்பான கருத்தை எடுத்து வைப்பவரைப் போன்ற அறிவீனமாகும். ஏனெனில் அங்கு வானவியலின் அடிப்படையில் பேசப்படவில்லை. மாறாக பேச்சு வழக்கில் பேசப்படுகிறது என்பதை குறைந்த அறிவுடைய எவராலும் புரிந்து கொள்ள முடியும் - மொழிபெயர்ப்பாளர்).

(ஜேம்ஸ் என்ற) கிறித்தவர் திருக்குர்ஆனின் மீது ஆட்சேபனை செய்து விட்டார்தான். ஆனால் சுவிசேஷத்தில் எந்த இடங்களில் உண்மையிலும், யதார்த்தமானதாகவும் ஆட்சேபனை இருக்கிறதோ அவற்றை மறந்து விட்டார். எடுத்துக்காட்டாக, புதிய ஏற்பாடு மத்தேயு, மாற்கு ஆகியவற்றில் எழுதப்பட்டிருப்பதாவது, இறைவனின் படைப்பினங்களுக்கு நீதியளிப்பதற்காக மஸீஹ் வானத்தில் இருந்து இறங்குவதைக் காண்பீர்கள். அப்போது சூரியன் இருளடைந்து விடும். சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும். நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழுந்து விடும். (மத்தேயு 24:29; மாற்கு 13:24,25 காண்க - மொழிபெயர்ப்பாளர்).

எல்லா நட்சத்திரங்களும் பூமியில் விழுவதும், எல்லாம் துண்டு துண்டாகி பூமியின் ஏதாவதொரு மூலையில் விழுவதும் எப்படி சாத்தியமாகும்? மேலும் ஆதமின் மக்கள் மீது அவை விழுந்தால் எவ்வாறு அவர்கள் பாதிப்பு இல்லாமலும் பாதுகாப்புடனும் இருக்க முடியும்? என்ற இந்தச் சிக்கலை இப்போது வானியல் அறிவியலே உருவாக்குகிறது. ஆனால் ஒரு நட்சத்திரம் விழுவது கூட பூமியில் வாழ்பவர்களை நாசமாக்குவதற்குப் போதுமானதாகும். பிறகு நட்சத்திரங்கள் பூமியில் விழுந்து பூமியில் உள்ளவர்களை அடையாளம் இல்லாத அளவுக்கு அழித்து விடுமென்றால், நீங்கள் என்னை மேகத்திலிருந்து இறங்குவதைப் பார்ப்பீர்கள் என்ற மஸீஹின் கூற்று எவ்வாறு சரியானதாகும்? மக்கள் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களின் கீழே அமுங்கி மரணித்துக் கிடக்கும்போது, மஸீஹ் இறங்குவதை யார் காண்பார் என்பதும் சிந்திக்கத்தக்கதாகும். மேலும் பூமி நட்சத்திரத்தின் ஈர்ப்பு விசையால் உறுதியாகவும், நிலைகொண்டவாறும் இருக்கும்போது அது எவ்வாறு தனது சரியான நிலையில் நிலையாகவும், உறுதியாகவும் இருக்கும்? மேலும் (சுவிசேஷத்தில் எழுதி இருப்பது போன்று) மஸீஹ் இறைவனுக்கு விருப்பமான எந்த நபர்களை வெகு தொலைவிலிருந்து அழைப்பார்? எவருக்கு தண்டனை கொடுப்பார்? எவரை எச்சரிப்பார்? ஏனெனில் நட்சத்திரங்கள் விழுவது பொதுவான அழிவுக்கும், பொதுவான மரணத்திற்கும் இன்னும் கூறுவதென்றால், பூமியின் மேற்பரப்பை முற்றிலும் நாசமாக்குவதற்கும் காரணமாக இருக்கும் என்பது வெளிப்படை.

(தொடரும்...)

சுவிசேஷத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ....மேலும் இந்த நேரம் என்னிடமிருந்து நீங்கட்டுமாக என்று வேண்டினார். என் பிதாவே! இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படிச் செய்யும் என்று வேண்டினார்......

மேலும் கடைசியில், ‘ஏலீ ஏலீ லாமா சபக்தானீ’ என்று கூறியவாறு உயிரை விட்டார். அதன் பொருள்: என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்பதாகும். (மத்தேயு 27:46 காண்க).




# ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஐரோப்பிய சுற்றுப் பயணம்

தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மத்

1

“பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் உள்ள வாழும் மார்க்கங்களின் மாநாடு” என்ற பெயரில் இலண்டனில் நடைபெறவிருந்த ஒரு சர்வ சமய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு 1924 மே மாதம் அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த அழைப்பு பெறப்பட்ட பின்பு துஆக்கள் இஸ்திகாரா மற்றும் ஜமாஅத்தின் பொது உறுப்பினர்களுடனான ஆலோசனை (ஷூராயே ஆம்) ஆகியவற்றிற்குப் பிறகு இங்கிலாந்து செல்வதற்கு ஹுஸூர் (ரலி) அவர்கள் முடிவு செய்தார்கள். இந்த அழைப்பு பெறப்பட்ட பின்னர் இங்கிலாந்து செல்வதற்கான திட்டம் வகுக்கப்பட்டாலும் உண்மையில் இந்தப் பயணத்தின் முதன்மையான நோக்கம் இதுவாக இருக்கவில்லை. ஹுஸூர் (ரலி) அவர்கள் இது குறித்து பல்வேறு இடங்களில் கூறியுள்ளார்கள். இந்தப் பயணத்திற்கு இரண்டு முக்கிய குறிக்கோள்கள் இருந்தன. ஒன்று மேற்கத்திய உலகை மதிப்பீடு செய்து இஸ்லாத்தின் பிரச்சாரத்திற்காக ஒரு திட்டம் வகுப்பதாகும். இரண்டாவது இந்த பயணத்தின் மூலமாக பல்வேறு பழைய முன்னறிவிப்புகள் நிறைவேற வேண்டியிருந்தது.

## துஆக்களும் ஆலோசனைகளும்:

முதலாவதாக இந்த அழைப்பு பெறப்பட்ட பின்னர் இது குறித்து வெளியில் எதுவும் கூறப்படாமல் ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்கு மட்டுமே தெரியப்படுத்தப்பட்டது. 14 மே 1924-ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்விஷயம் குறித்து ஆலோசனை பெறுவதற்காக ஜமாஅத்திற்கு ஒரு விளக்கமான கடிதம் எழுதினார்கள். அதில் மேற்கொள்ளப்படவிருக்கும் இந்தப் பயணம் தொடர்பான பின்னணியையும் அதன் பல்வேறு அம்சங்கள் குறித்தும் கூறி இருந்தார்கள். பிறகு ஹுஸூர் (ரலி) அவர்கள் பொதுவான ஷூராவிற்காக அனைத்து உறுப்பினர்களையும் 16 மே 1924 அன்று முபாரக் பள்ளிவாசலில் கூட்டினார்கள். உறுப்பினர்கள் தம்முடைய வாக்கை அளித்தனர். கலீ∴பா அவர்கள் இந்தப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு அளிக்கப்பட்ட வாக்குகள் மிகப் பெரும்பான்மை -யாக இருந்தன. இருப்பினும் ஹுஸூர் (ரலி) அவர்கள் வெளியில் உள்ள ஜமாஅத்துகளின் கருத்தையும் கேட்காத வரை தமது முடிவை கூறப்போவதில்லை என்று கூறினார்கள். 23 மே 1924 இல் ஹுஸூர் (ரலி) அவர்கள் இந்த பயணம் குறித்து வெளிப்படையாக அறிவித்தார்கள். அதில் “என்னுடைய இங்கிலாந்து பயணத்தை தற்போது மேற்கொள்வது பொருத்தமானதா இல்லையா என்பதை குறித்து நான் இஸ்திகாரா செய்ததுடன் 40 உறுப்பினர் -களையும் இதற்காக இஸ்திகாரா செய்யுமாறும் கூறி இருந்தேன். என்னுடைய கருத்து என்னவெனில் எல்லா ஜமாஅத்துகளின் கருத்துகளையும் பெற்ற பின்னர் இஸ்திகாராவையும் செய்து முடித்த பின்னர் இது குறித்து முடிவு செய்யப்பட வேண்டும் என்பதாக இருந்தது” (குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 8 பக்கம் 413)

இந்த காலகட்டத்தில் ஹுஸூர் (ரலி) அவர்கள் தம்முடைய ஒவ்வொரு நொடிப் பொழுதையும் இந்த பயணம் குறித்த பணிகளுக்காக அர்ப்பணித்தார்கள். ஹுஸூர் (ரலி) அவர்கள் ஒரு கட்டுரை எழுதிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ∴பஜ்ர் தொழுகையில் இருந்து இரவு பின்னேரம் 2.00 மணி வரை இந்தப் பணியில் மூழ்கி இருந்தார்கள். அது கோடை காலமாக இருந்த போதிலும் மின்விசிறிகளுக்கான எந்த முறையான ஏற்பாடும் இல்லாமல் இருந்தது. (அல்∴பஸ்ல் 20 ஜூன் 1924)

## இங்கிலாந்து செல்வதைக் குறித்து அறிவிப்பு:

துஆக்களுக்கு பிறகு இஸ்திகாரா மற்றும் ஆலோசனைகளை ஜமாஅத் உறுப்பினர்களுடன் செய்த பிறகு தம்முடைய இங்கிலாந்து பயணத்தைக் குறித்த அறிவிப்பை ஹுஸூர் (ரலி) அவர்கள் வெளியிட்டார்கள். அந்த அறிவிப்பு அல் ∴பஸ்ல் 24 ஜூன் 1924-ல் வெளியிடப்பட்ட ஒரு கட்டுரையில் இடம்பெற்றிருந்தது. அந்தக் கட்டுரையில் ஹுஸூர் (ரலி) அவர்கள் தம்முடைய பயணத்தின் நோக்கத்தைக் குறித்து விரிவாகக் கூறியிருந்தார்கள். இந்த பயணத்தின்போது ஏற்படவிருக்கும் கடினங்கள் ஜமாஅத்தின் பொருளாதார நிலையில் உள்ள சிக்கல்கள் மேலும் சில விஷயங்களைக் கூறிய பின்னர் அவர்கள் கூறினார்கள்: இந்த எல்லாக் கஷ்டங்களும் இருப்பினும் நான் என்னுடைய கடமைகளை மார்க்கத்திற்காகவும் ஜமாஅத்திற்காகவும் உள்ள எனது கடமைகளை என்னுடைய சுகம் மற்றும் எனது உறவினர்களின் எதிர்பார்ப்புக்கு எதிராக வைத்துக் கொண்டவனாக நான் முடிவு செய்து இருக்கிறேன். நான் அறிந்துள்ள பல விஷயங்கள் குறித்து கூற முடியாதவனாக இருக்கிறேன். அதனைக் குறித்து நீங்கள் அறிந்தால் உங்களில் பலரது உள்ளம் கருணையாலும் அனுதாபத்தின் உணர்வுகளாலும் நிரம்பி விடும். இருப்பினும் நான் எல்லாம் வல்ல அந்த இறைவன் மீது நம்பிக்கை கொள்கின்றேன். (தோராயே ஈரோப் 1924 அன்வருல் உலூம் தொகுதி 8 பக்கம் 380-381)

மேலும் ஹுஸூர் (ரலி) அவர்கள் தாம் பாம்பேயில் இருந்து 15 ஜூலை 1924-ல் புறப்படுவதாகவும் காதியானில் இருந்து புறப்படும் தேதி பின்னர் தெரியப்படுத்தப்படும் என்றும் கூறியிருந்தார்கள்.

ஹுஸூர் (ரலி) அவர்கள் இந்த நிகழ்ச்சிக்கான அழைப்பை ஏற்றுக் கொண்டதே மாநாட்டின் மீது ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதை மாநாட்டின் அமைப்பாளர்களின் வட்டத்திலிருந்து நாம் தெரிந்து கொள்கின்றோம். சர் இ டெனிசன் ரோஸ் இவ்வாறு கூறுகிறார்: “நாம் ஏற்கனவே அறிந்திருந்தபடி மாநாட்டில் கட்டுரை வாசிப்பதற்காக நாம் யாருக்கெல்லாம் அழைப்பு விடுத்திருந்தோமோ அவர்கள் எல்லாரும் வருவார்கள் என்பது சாத்தியமில்லை. ஆனால் இந்த அழைப்பிற்கு ஆரம்பம் முதலே வருகின்ற ஒப்புதல்கள் மிகவும் ஊக்கம் தருவதாக இருக்கின்றன. குறிப்பாக நாம் மிகவும் நன்றி கூறுகின்றோம். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் கலீ.'.பத்துல் மஸீஹ் அவர்கள் உடனடியாக இதற்காக தம்மை பின்பற்றுபவர்களுடன் இலண்டன் வருவதாக தெரிவித்துள்ளார்கள். இது நம்முடைய இந்த மாநாட்டு நிகழ்ச்சிக்கு ஒரு பெரும் விளம்பரத்தை ஏற்படுத்தித் தரும் விஷயமாகும்.” (இலண்டன் 1925 பக்கம் 5)



## பயணத்தின் நோக்கங்கள்:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தம்முடைய பயணத்தின் மீதான இறை நாட்டத்தைக் குறித்து இவ்வாறு கூறுகின்றார்கள்: “அதாவது மேற்கத்திய நாடுகளில் ஒரு மகிமை மிக்க புரட்சியை உருவாக்குவது எல்லாம் வல்ல இறைவனின் நாட்டம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. சூரியன் மேற்கிலிருந்து உதயமாகும் என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு (ஸஹீஹ் புகாரி கிதாபுத் த.'.ப்ஸீர் ஹதீஸ் 4635) அதற்கு ஒரு சான்று ஆகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஆன்மிகக் காட்சி அதாவது மேற்கத்திய நாடுகளில் உள்ள மக்கள் குறிப்பாக அன்னாரது ஜமாஅத்தில் இணைவார்கள் என்பதும் இதற்கு ஒரு சான்று ஆகும். நானும் கூட இரண்டு ஆன்மிகக் காட்சிகளை இது தொடர்பாகக் கண்டுள்ளேன். இது குறித்து இங்கிலாந்துக்கு செல்லக்கூடிய இந்தப் பயணத்தை பற்றிய விஷயம் வருவதற்கு முன்பே நான் கூறியுள்ளேன். இவை யாவும் மேற்கத்திய உலகில் நம்முடைய வெற்றிக்கு சான்று பகர்கின்றன.” (தோராயே ஈரோப் 1924 அன்வாருல் உலூம் தொகுதி 8 பக்கம் 383)

இறைவேதத்திலிருந்தும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துக்களிலிருந்தும் அன்னாரது ஒரு கலீ.'.பா மேற்கத்திய உலகை நோக்கி பயணம் மேற்கொள்வார் என்று தெரிகிறது. ஆனால் இது எவ்வாறு நிகழும் என்பது அனைவருக்கும் மறைக்கப்பட்ட ஒன்றாக இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இலண்டனில் ஓர் இடத்தில் நின்று கொண்டு உரையாற்றுவதாகவும் இஸ்லாத்தின் உண்மையை ஆங்கில மொழியில் எடுத்துக் கூறிக் கொண்டிருப்பதாகவும் கூறிய அந்த ஆன்மிகக் காட்சி கூட அது எவ்வாறு நிகழும் என்பதை காதியான் என்ற அந்தக் கிராமத்தில் வாழும் ஒருவரால் கணித்துப் பார்க்க முடியாதிருந்தது.

ஜமாத்தின் சில உறுப்பினர்கள் ஹுஸூர் (ரலி) அவர்களின் பயணத்தைக் குறித்து தவறான கருத்து கொண்டிருந்தனர். அதாவது ஹுஸூர் (ரலி) அவர்கள் ஒரு பிரச்சாரகரைப் போன்று இஸ்லாத்தைப் பரப்புவதற்காக இந்தப் பயணம் மேற்கொள்கிறார்கள் என்று கருதி இருந்தனர். ஆனால் கலீ.'.பா அவர்கள் ஒரு தளபதியாவார்கள். ஓர் உயர்ந்த தலைவர் ஆவார்கள். அவர்களுடைய பணி அதை விட மிகவும் மேலானதாக இருந்தது. அந்தப் பயணத்தின் நோக்கம் பிரச்சாரம் மேற்கொள்வதில் ஏற்படும் கஷ்டங்களை அறிந்து கொள்வதும் மேற்கத்திய நாடுகளில் எதிர்காலத்தில் பிரச்சாரத்தை மேற்கொள்ளும்போது பயன்படும் என்பதற்காக இங்கிலாந்தில் உள்ள உள்ளூர் சூழ்நிலைகளைப் பற்றி தெரிந்து கொள்வதும் ஆகும். மேலும் அபாயமான பிரச்சனைகளைக் குறித்தும் அவற்றின் தீர்வுகளைக் குறித்தும் முன்னரே கருத்தில் கொள்ளாமல் இருந்தால் இஸ்லாம் மேற்கத்திய உலகில் பரவுவது அதன் அழிவுக்கு காரணமாக அமைந்து விடும். (பக்கம் 427 )

இந்தப் பயணத்தின் இரண்டாவது நோக்கம் சில முன்னறிவிப்புகள் நிறைவேறுவதாகும். அந்த முன்னறிவிப்பு -கள் பலவாறாக உள்ளன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய ஒரு பிரதிநிதி அந்த முன்னறிவிப்புகளை நிறைவேற்றுவார். அவை துல்கர்னைனின் பயணம் டமாஸ்கஸில் உள்ள ஒரு வெள்ளை மினாராவில் இறங்குதல், லுத் வாசலை சென்றடைதல், இலண்டனில் ஒரு மேடையில் நின்று பேசுதல் போன்றவை ஆகும்.

## காதியானிலிருந்து புறப்படுதல்:

11 ஜூலை 1924 அன்று காலை ஹுஸூர் (ரலி) அவர்கள் பெஹிஷ்தி மக்பராவில் உள்ள ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய கப்ருக்குச் சென்று மிக நீண்ட பிரார்த்தனை செய்தார்கள். பின்னர் ஹுஸூர் (ரலி) அவர்கள் வீட்டிற்குச் சென்று பின்னர் ஜுமுஆ தொழ வைப்பதற்காக பள்ளிவாசலுக்குச் சென்றார்கள். ஜுமுஆ உரையில் ஹுஸூர் (ரலி) அவர்கள் மேற்கத்திய உலகை இஸ்லாத்தின் பக்கம் கொண்டு வருவதற்கான விரிவான திட்டத்தை விவரித்தார்கள். மேலும் மேற்கத்திய உலகத்தை இஸ்லாத்திற்குக் கொண்டு வருவது மட்டுமல்ல. மாறாக முக்கியமான விஷயம் ஹஸ்ரத்

முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த அந்த இஸ்லாத்தின் உண்மையான ஆன்மாவை அவர்களிடத்தில் ஏற்படுத்துவதாகும் என்று குறிப்பிட்டார்கள். (அல் ஃபஸ்ல் 15 மற்றும் 20 ஜுலை 1924)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் இந்தப் பயணத்தைக் குறித்தும் வெம்ப்ளி மாநாட்டில் அவர்கள் கலந்து கொள்ளவிருப்பதைக் குறித்தும் செய்திகள் நாளிதழ்களிலும் பத்திரிகைகளிலும் ஆரம்பத்திலிருந்தே வெளிவந்த வண்ணமிருந்தன. அந்தப் பத்திரிக்கைகளுள் சில கவெண்ட்ரி ஈவனிங் டெலிகிராஃப், திகோலாங் போஸ்ட் ஆஃப் ஜெர்மனி, ஹேம்ஸ்டெட் அட்வர்டைஸர், திரீடிங் அப்ஸர்வர், அஷ்போர்னே டெலிகிராப், ஸ்ட்ரட்ஃபோர்ட் அப்பான் ஏவன் ஹெரால்ட்.

12 ஜுலை அன்று பஜ்ர் தொழுகைக்காக ஜமாஅத்தின் சகோதரர்கள் ஒன்று கூடினர். 8.00 மணி அளவில் ஹுஸூர் (ரலி) அவர்கள் பைத்துத் துஆவில் ஒரு நீளமான பிரார்த்தனை செய்தார்கள். பின்னர் அவர்கள் வெளியே வந்ததும் சகோதரர்கள் அன்னாரோடு சேர்ந்து சென்றனர். சற்று தூரத்தில் ஹுஸூர் (ரலி) அவர்கள் சகோதரர்களுடன் ஒரு நீண்ட கூட்டு துஆ செய்தார்கள். பிறகு ஒரு கூட்டு நிழற்படம் எடுத்துக் கொள்ளப்பட்டது. பின்னர் ஹுஸூர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் (ரலி) அவர்களிடம் சென்றார்கள். பின்னர் ஹுஸூர் (ரலி) அவர்கள் தமது காரில் ஏறி அமர்ந்தார்கள். அல்லாஹு அக்பர் என்ற முழக்கத்தோடு கார் கிளம்பி சென்றது. (அல் பஸ்ல் 15 ஜுலை 1924 பக்கம் 1,2)

### காதியானிலிருந்து பம்பாய் வரை:

காதியானுக்கும் பம்பாய்க்கும் இடையிலான தூரம் ஆயிரத்தி எழுநூறு கிலோ மீட்டரை விட அதிகமாகும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் அவர்களின் பயணக் குழுவினரும் இந்தத் தூரத்தை 1924-ல் ஐரோப்பாவுக்குச் செல்கின்ற வழியில் இரயிலின் மூலம் கடந்தார்கள். இந்த தூரத்தைக் கடப்பதற்கு அவர்களுக்கு மூன்று நாட்கள் ஆயிற்று. அவர்கள் பட்டாலாவில் இருந்து கடந்து சென்ற நிலையங்கள் - ஜெயந்தி பூர், நாத்துநங்கல், அம்ரிஸ்டர், பியாஸ், ஜலந்தர் சிட்டி, ஹோஷியார்பூர், ஜலந்தர் கேண்ட், பாக்வாரா, பில்லாவூர், லூதியானா, ராஜ்புரா, அம்பாலா கேண்ட், ஸஹாரன்பூர், முசாபர் நகர், மீரட், காசியாபாத், டெல்லி, கோசி காலன், மதுரா ஜங்ஷன், ஆக்ரா காண்ட், தோல்பூர், குவாலியர், ஜான்சி பினா, போபால் மேலும் மண்பாட் ஜங்ஷன்.


ஸஹாரன்பூரில் இருந்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் அவர்களின் பயணக் குழுவினரும் பிபி அண்ட் சிஐ இரயில்வே சர்வீஸ் மூலம் பம்பாய் செல்ல திட்டமிட்டிருந்தனர். ஹஸ்ரத் ஷேக் யாகூப் அலி இர்ஃபானி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "ஒவ்வோர் இரயில் நிலையத்திலும் பெரும் கூட்டம் தம்முடைய அன்பிற்குரிய இமாம் அவர்களைச் சந்திப்பதற்காக வந்து நின்றமையால் ஒவ்வோர் இரயில் நிலையத்திலும் தாமதம் ஏற்பட்டு அந்த சிறு சிறு தாமதங்கள் இறுதியில் ஸஹாரன்பூர் இரயில்வே ஸ்டேஷன் வந்தபோது ஒரு மணி நேரம் முழு தாமதம் ஏற்பட்டது. அதன் விளைவாக அவர்களால் பிபி அண்ட் சிஐ இரயில்வே சேவையைப் பெற முடியவில்லை. மற்றோர் இரயிலை அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டியதாயிற்று (அல் ஃபஸ்ல் ஜுலை 1924 பக்கம் 3-4)

### ஈதுல் அல்ஹா தொழுகை:

பயணக் குழு மண்பாட் இரயில் நிலையத்தை 14 ஜுலை 1924 அன்று சென்றடைந்தது. அந்த இரயில் நிலையத்தின் பிளாட்பார்மில் ஹுஸூர் (ரலி) அவர்கள் காலை 11.00 மணிக்கு ஈதுல் அல்ஹா பெருநாள் தொழுகை தொழ வைத்தார்கள். அந்த உரையின்போது அவர்கள் குறிப்பிட்டார்கள்: "நான் உங்களுக்கு அறிவுறுத்த விரும்புகின்றேன். ஒவ்வொரு விஷயத்திலும் பொருத்தமான முன்னேற்பாடுகளை நீங்கள் செய்து கொள்ள வேண்டும். ஒரு சிறிய பயணமாக இருப்பினும் சரியே. அதற்கு ஏற்றார்போல் தயாராக வேண்டும். இப்பொழுது நாம் மேற்கொண்டிருக்கும் பயணம் மிகப்பெரிய நீண்ட பயணமாகும். மிகவும் உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்ட பயணமாகும். மேலும் அதனுடைய ஆயத்தம் என்பது நாம் அதன் வெற்றிக்காக துஆ செய்து கொண்டிருப்பதாகும். இந்த ஆன்மிக முயற்சியும் துஆக்களும் இந்தப் பயணத்தை வெற்றிக்குரியதாக ஆக்கும். அதற்காக நீங்கள் அல்லாஹ்வை நினைவு கூற வேண்டும். மிகவும் பற்றுதலுடன் நீங்கள் அல்லாஹ்வை நினைவு கூற வேண்டும். நமக்கு வெற்றியைத் தர வேண்டும் என்பதற்காக துஆக்கள் செய்ய வேண்டும். ஆனால் நம்முடைய பிழைகளின் காரணமாக இந்த வெற்றியின் வழியில் ஏதாவது தடங்கள் ஏற்பட்டால் அதனால் நேரமும் பணமும் வீணாகி விடும். அல்லாஹ் நம்முடைய செயல்கள் வீணாவதை விட்டும் காப்பானாக! ஆமீன்" என்று குறிப்பிட்டிருந்தார்கள். (21 ஜுலை 1924 பக்கம் 7)

### பம்பாய் வந்தடைதல்:


கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் அவர்களின் பயணக் குழுவினரும் 1924 ஜுலை 16-ஆம் தேதி மாலை 5.00 மணி அளவில் பம்பாய் இரயில் நிலையத்தை அடைந்தனர். அது விக்டோரியா டெர்மினல் ஆகும். (தற்போது சத்ரபதி சிவாஜி மகாராஜ் டெர்மினஸ்) அங்கு ஜமாஅத்தின் உறுப்பினர்கள் ஹுஸூர் (ரலி) அவர்களை வரவேற்க திரளாகக் காத்திருந்தனர். நிழல் படங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டது. பின்னர் 1924 ஜுலை 15-ஆம் தேதி காலை 8:30 மணி அளவில் தாமஸ் குக் அண்ட் சன் என்ற கப்பல் கம்பெனியின் எஸ் எஸ் ஆப்பிரிக்கா என்ற கப்பல் மூலம் பம்பாயிலிருந்து அவர்களது பயணம் தொடர்ந்தது.



### கெய்ரோவுக்கு செல்லுதல்:

எஸ் எஸ் ஆப்பிரிக்கா 23 ஜுலை 1924 அன்று ஏதேன் வந்தடைந்தது. வழக்கம் போலவே பத்திரிகைகளும் நாளிதழ்களும் கலீ.்பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் செய்திகளாகவும் கட்டுரைகளாகவும் வெளியிட்டன. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுப் பயணத்தைக் குறித்து கூறும் பொழுது ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.்பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள். "இது ஐரோப்பாவுக்கும் அத்துடன் அரபு நாடுகளுக்கும் ஒரு கலீ.்பத்துல் மஸீஹ் மேற்கொண்ட முதல் பயணமாகும். ஹஸ்ரத் இரண்டாவது கலீ.்பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களைத் தவிர வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வேறு எந்த கலீ.்பாவும் சிரியாவுக்கோ எகிப்திற்கோ பாலஸ்தீனத்திற்கோ அல்லது வேறு அரபு நாடுகளுக்கோ சென்றதில்லை. (குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி 12 பக்கம் 121-122)

29 ஜுலை 12.00 மணி அளவில் பயணக் குழு கெய்ரோவுக்கு (எகிப்தின் தலைநகர்) இரயிலின் மூலம் சென்றது. கெய்ரோ இரயில் நிலையத்தை வந்தடைந்த -தும் ஹுஸூர் (ரலி) அவர்கள் கூட்டுத் துஆ செய்தார்கள். பிறகு ஒரு குழு புகைப்படம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இரயில் நிலையத்தில் ஹுஸூர் (ரலி) அவர்களும் பயணக் குழுவினரும் ஷேக் முகமது அஹ்மத் சாகிப் இர்பானி (ரலி) அவர்களின் வீட்டில் தங்கியிருந்தார்கள். அந்த வீட்டிற்கு சென்ற சில நிமிடங்களிலே நான்கு உலமாக்கள் ஹுஸூர் (ரலி) அவர்களைச் சந்தித்து அரபி மொழியில் கருத்துப் பரிமாற்றம் செய்தனர். 30 முதல் 45 நிமிடங்கள் நடைபெற்ற இந்தக் கருத்துப் பரிமாற்றத்தில் கிலா.்பத் குறித்து பேசப்பட்டது . (அல்.்பஸல் 2 செப்டம்பர் 1924 பக்கம் 5)



ஹுஸூர் (ரலி) அவர்களின் வழிகாட்டுதலின்படி ஹஸ்ரத் ஷேக் ய.்கூப் அலி இர்.்பானி (ரலி), ஹஸ்ரத் ஹா.்பிஸ் ரோஷன் அலி (ரலி), சவுத்ரி .்பத்தே முஹம்மத் சியால் (ரலி) ஆகிய மூவரும் பல்வேறு பத்திரிகைகளின் ஆசிரியர்களையும் நிருபர்களையும் சந்தித்தார்கள். அந்தப் பத்திரிகைகள் அல் லிவா, அல் அஹ்பார், அல் முகத்தம், லத்தீ.்பே முஸவ்வரா, எஜிப்ஸியன் மெயில், மஹ்ரோசா. (அல் .்பஸ்ல்16 செப்டம்பர் 1924 பக்கம் 5) பிறகு ஹுஸூர் (ரலி) அவர்கள் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தையும் அமர் பின் அல் ஆஸ் பல்கலைக்கழகத்திற்கும் சென்று பார்வை இட்டார்கள். (ஸ.்பரே ஈரோப் பக்கம் 40)

### கெய்ரோவிலிருந்து புறப்பாடு:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் 31 ஜுலை 1924 அன்று ஜெருசலேமிற்கும் டமாஸ்கசுக்கும் செல்வதற்காக கெய்ரோவிலிருந்து புறப்பட்டார்கள். பல பிரபலமானவர்களும் உலமாக்களும் ஹுஸூர் (ரலி) அவர்களை கெய்ரோவில் சந்தித்தார்கள். அது நம்முடைய வழியில் மிக நல்ல விளைவை தந்தது. (தி ரிவியூ ஆ.்ப் ரிலிஜியன்ஸ் தொகுதி 23 ஆகஸ்ட் 1924 பக்கம் 299) ஹுஸூர் (ரலி) அவர்கள் கெய்ரோவில் இருந்து எல் கண்ட்டாரா ஸ்டேஷனுக்கு இரவு 9.30 மணி அளவில் வந்து சேர்ந்தார்கள். பிறகு அங்கிருந்து இரயில் மூலம் பாலஸ்தீனுக்குச் சென்று அல்லூத் என்ற இடத்திற்கு ஆகஸ்ட் 1-ஆம் தேதி காலை 6:30 மணிக்கு வந்தடைந்தார்கள். பிறகு அங்கிருந்து மற்றொரு இரயில் மூலம் ஜெருசலேமிற்கு காலை 9.30 மணி அளவில் வந்து அங்கு நியூ கிராண்ட் ஹோட்டலில் தங்கினார்கள். (ஸ.்பரே ஈரோப் பக்கம் 41- 43)

ஒரு பாலஸ்தீனிய நாளிதழ் லிசான் அல் அரபு 19 ஆகஸ்ட் 1924-ல் கலீ.்பத்துல் மஸீஹ் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியது. அதில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கொள்கைகளைப் பற்றி அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. தி சிவில் அண்ட் மிலிட்டரி கெசட் இவ்வாறு அறிக்கை வெளியிட்டிருந்தது. "31 ஜுலை அன்று கலீ.்பத்துல் மஸீஹ் ஜெருசலேம் சென்றார்கள். ஆகஸ்ட் 2-ல் சுப்ரீம் கவுன்சில் உடைய பிரசிடெண்ட் கலீ.்பத்துல் மஸீஹ் அவர்களுக்கு விருந்து கொடுத்து கவுரவித்தார். மேலும் நகரில் உள்ள முக்கிய பிரமுகர்களை கலீ.்பத்துல் மஸீஹ் அவர்களைச் சந்திக்குமாறு அழைப்பு விடுத்தார். ஆகஸ்ட் 3-ஆம் தேதி பாலஸ்தீனின் ஹை கமிஷனர் ஹுஸூர் (ரலி) அவர்களை விருந்திற்கு அழைத்து அவர்களோடு முஸ்லிம் உலகின் அரசியல் சூழ்நிலை குறித்து பேச்சு வார்த்தை நடத்தினார். மேலும் முஸ்லிம் மக்களின் நலனைப் பாதுகாப்பது குறித்தும் கேள்விகள் கேட்டார். இந்த சுற்றுப் பயணத்தில் ஹுஸூர் (ரலி) அவர்களுடைய இந்த வருகை ஜெருசலேம் மக்களிடையே ஒரு சலசலப்பை ஏற்படுத்தியது." (சிவில் அண்ட் மிலிட்டரி கெசட் 21 ஆகஸ்ட் 1924)

### ஜெருசலேமின் பல்வேறு இடங்களை பார்வையிடல்:

1 ஆகஸ்ட் 1924-ல் ஹுஸூர் (ரலி) அவர்கள் கார் மூலமாக பெத்தலகேம் சென்றார்கள். அங்கு ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை), ஹஸ்ரத் சாரா (அலை), ஹஸ்ரத் யூசுப் (அலை) ஆகியோரின் அடக்கஸ்தலங்களுக்கு சென்றார்கள். பிறகு அடுத்த நாள் ஹுஸூர் (ரலி) அவர்கள் பைத்துல் முகத்தஸ் பள்ளிவாசலுக்கும், உமர் பள்ளிவாசலுக்கும், ஒலிவ மலைக்கும், அழும் சுவருக்கும் விஜயம் செய்தார்கள். இந்த வருகைகளின்போது பல புகைப்படங்களை எடுத்துக் கொண்டார்கள். (ஸ.்பரே ஈரோப் பக்கம் 43- 47)

3 ஆகஸ்ட் அன்று காலையில் ஹுஸூர் (ரலி) அவர்கள் ஜெர்மன் சேப்பல் மற்றும் ஈஸா (அலை) சென்றதாகக் கூறப்படும் பல்வேறு இடங்களுக்கும் விஜயம் செய்தார்கள். (அல்.்பஸ்ல் 4 செப்டம்பர் 1924 பக்கம் 5)

(தொடரும்...)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam